GTV Express
11KG மேல் 1KG க்கு
லண்டன் (UK) – 1150
கனடா – 2800
225 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
81A பாயின்ட் பெட்ரோ வீதி நெல்லியடி
A9 வீதி (கந்தசாமி கோவிலுக்கு முன்னால்) கிளிநொச்சி
25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
☎ +94 11 465 44 44

Registered as a Newspaper

பக்கங்கள் 16+8 | விலை ரூ. 60

# உதயன்

சஞ்சீவி

சுடர் : 38
கதிர் : 113

ஞாயிற்றுக்கிழமை 19 மார்ச் 2023

பங்குனி 05 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# உணவுக்கு வழியின்றி 7 மில்லியன் மக்கள்!

## இலங்கை தொடர்பில் ஐ.நா. அறிக்கை

கொழும்பு, மார்ச் 19

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் விளைவாக உணவு, கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் தொடர்ந்து சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். சுமார் 7 மில்லியன் மக்கள் இந்த மனிதாபிமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். »15



எதிர்ப்புகளுக்கு மத்தியில்

# நாவற்குழி விகாரை நேற்று திரைநீக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

தமிழர் தாயகத்தின் பலமுனை எதிர்ப்புக் களுக்கு மத்தியில், நாவற்குழி விகாரை நேற்று கலச திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

நாவற்குழியில் புதிதாக அமைக்கப்பட்ட விகாரை, சமீத்தி சுமண எனப் பெயரிடப்பட்டு »15

# பாடசாலைகளுக்கு ஏப்ரல் 5 விடுமுறை

## கல்வியமைச்சால் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளின் முதலாம் தவணையின் முதலாம் கட்ட விடுமுறை எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. »15

# 40 அரச நிறுவனங்களின் செயற்பாடு இடைநிறுத்தம்

## செஹான் சேமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 19

பொருளாதார நெருக்கடி காரணமாக, சுமார் 40 அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை இடை நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான மறுசீரமைப்புக்களின்போது »15



# நாவற்குழி விகாரைக்கு எதிராக நேற்றுப் போர்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

நாவற்குழி பகுதியில் நேற்று இடம்பெற்ற விகாரை கலச திரைநீக்கத்துக்கு எதிராகவும், அதில் சவேந்திர சில்வாவின் பங்குபற்றலுக்கு எதிராகவும் நேற்றையதினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. »15

# மஹிந்தவின் ஊழலால்தான் நாடு படுதோல்வியடைந்தது

## சந்திரிகா நேற்றுக் கருத்து



கொழும்பு, மார்ச் 19

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்த ஊழல்கள், மோசடிகள் மற்றும் அரச சொத்துக்களை கொள்ளையிடப்பட்டமையின் காரணமாகவே இன்று இலங்கை படுதோல்வியடைந்த நாடாகக் காணப்படுகிறது என்று முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் »15

முச்சந்தி முரளி



"நெடுந்தீவைக் கூட விட்டுவைக்க மாட்டாங்கள் போல. எல்லாம் எங்கட விதி"

# அராலியில் விபத்து இளைஞன் இறப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி சந்தியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆனைக்கோட்டை, 3ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த ஜெனட் மாறன் (வயது-25) என்பவரே உயிரிழந்தவராவார்.

பேருந்தும் பட்டா ரக வாகனமும் ஒன்றுக்கொன்று மோதியதிலேயே இந்த »15

# ஐ.எம்.எப். உடன்பாடு பகிரங்கப்படுத்தப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பான அறிக்கை பெரும்பாலும் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் - என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட »15

# நெடுந்தீவில் வரலாற்றை திரிவுபடுத்தும் கடற்படை

## வெடியரசன் கோட்டைக்கு அருகிலுள்ள தமிழ் பௌத்த எச்சத்துக்கு பதாகை வைப்பு

யாழ்ப்பர்ணம், மார்ச் 19

நெடுந்தீவிலுள்ள வெடியரசன் கோட்டைக்கு அருகில், 50 மீற்றர் தூரத்திலுள்ள தமிழ் பௌத்த எச்சத்துக்கு அண்மையாக இலங்கைக் கடற்படையால், வரலாற்றைத் திரிபுபடுத்தி தகவல் பதாகை வைக்கப்பட்டுள்ளது. »15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 19

**நாட்டின் இந்த ஆண்டுக்கான உத்தியோகபூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி. அநுரகுமார் தெரிவிக்கையில்; 2012ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையின் உத்தியோகபூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. 2018ஆம் ஆண்டு முதல் இதற்கான செயற்பாடுகளை கொரோனா மற்றும் நாட்டின் அசாதாரண சூழ் நிலை காரணமாக தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது.

இந்நிலையில் புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான முன்னோடி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு ஜூன் மாதமளவில் முடிவுறுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பின்னர் முழுமையான மக்கள் தொகை கணக்கெடுப்பு அடுத்த ஆண்டில் தரவிடப்படும்- என்றார். (ச-இ)

## கஞ்சா கடத்த மோ.சைக்கிள்; பொலிஸ் உத்தியோகத்தர் கைது

கொழும்பு, மார்ச் 19



இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 16 கிலோ கேரள கஞ்சாவை ஏற்றிச் செல்வதற்கு மோட்டார் சைக்கிளை வழங்கிய குற்றச்சாட்டில் சிலாவத்துறை பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள், ஏழாலை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவரை 3 நாள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை நடத்த கொடிகாமம் பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி 16 கிலோ கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றினர். கஞ்சா கடத்தப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை கைவிட்டு, சந்தேகநபர்கள் தலைமறைவாகினர்.

அந்த மோட்டார் சைக்கிள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடையது. அவர் மன்னார், சிவாலத்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகிறார். தேடப்பட்டு வந்த பொது மகனான சந்தேகநபர் முதலில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தனது வீட்டுக்கு அருகிலுள்ள பற்றையிலிருந்து கஞ்சாவை எடுத்தேன் என்று அவர் கூறியபோதும், சந்தேகத்துக்கிடமான பெருந் தொகை பணப்பரிமாற்றங்களை அவர் மேற்கொண்டதற்கான ஆதாரங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நிலையில், மோட்டார் சைக்கிள் உரிமையாளரான பொலிஸ் கான்ஸ்டபிள், யாழ்ப்பாணம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஏழாலையில் வைத்து கைது செய்யப்பட்டு, கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரை 3 நாள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை நடத்த நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கைதான பொலிஸ் உத்தியோகத்தரின் உறவினரான மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தரிடமும் பொலிஸார் விசாரணை நடத்த எதிர்பார்த்துள்ளனர்.

ஆயினும் கஞ்சா கைப்பற்றப்பட்ட சம்பவத்தின் பின்னர் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் கடமைக்கு சமுகமளிக்க வில்லை என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## சிறுபோகத்தில் விதைநெல் கொள்வனவு செய்ய ஏற்பாடு

### யாழ்.கமநல திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 19

சிறுபோக நெற்செய்கை அறுவடையின்போது செய்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் விதைநெல்லை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட கமநலசேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது சிறுபோக நெற்செய்கை பரவலாக இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய சிறுபோக அறுவடையின்போது 406 மற்றும் ஏ.ரி.302 ஆகிய இனங்களைச் சேர்ந்த விதை நெல்லை செய்கையாளர்களிமிருந்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட விதைநெல்லை யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையின்போது பயன்படுத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என கமநலசேவைகள் திணைக்களம் தெரிவித்தது. (ச-17)

## கொழும்புத்துறையில் வெடிமருந்துகள் மீட்பு

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்புத்துறைப் பகுதியில் வெடிமருந்துகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன.

கொழும்புத்துறை கடற்கரையை அண்டிய பகுதியிலுள்ள பற்றைக்காட்டில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் சன்-99 வகை வெடிமருந்துகள் மற்றும் 28 துண்டுகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. அவற்றை சட்டநடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கடற்படையினர் தெரிவித்தனர். (ச-125)

## பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமன பரீட்சை மார்ச் 25 இல்

பட்டதாரிகளை அரச சேவைக்கு ஆசிரியர்களாக இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை நாடுமுழுவதும் 341 நிலையங்களில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான பட்டதாரிகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும் என்றும் அதன்படி, ஆசிரியர்கள் நியமனம் இடம் பெறும் என்றும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை-பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளதுடன் தேவையான நடவடிக்கைகள் பரீட்சைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்புச் சான்றிதழ் படிவத்தில் பிறப்புச் சான்றிதழ் வழங்கல்

### தற்காலிக மாற்றீடு

சாவகச்சேரி, மார்ச் 19

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பப் படிவங்கள் முடிவடைந்துள்ளமையால் இறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும் படிவத்தில் சில மாற்றங்களைச் செய்து பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மாவட்டச் செயலகத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் இவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

பிறப்புச் சான்றிதழுக்கு தினமும் பெருமளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன. அதனால் அதற்குரிய சான்றிதழ் படிவங்கள் பிரதேச செயலகங்களில் முடிவடைந்துள்ளன.

இதனால் பிரதேச செயலகங்களில் தேக்கமடையும் இறப்புச் சான்றிதழ் படிவங்களில் சில திருத்தங்களை யிட்டு பிறப்புச் சான்றிதழுக்கான உரிய படிவங்கள் வரும் வரை தற்காலிகமாக விநியோகிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமையவே இறப்புச் சான்றிதழ் படிவத்தில் பிறப்பு; சான்றிதழ் விநியோகம் இடம்பெறுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

## முன்னாள் எம்.பி. பி.எச்.பியசேன விபத்தில் சாவு!

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பி.எச்.பியசேன அம்பாறை, அக்கரைப்பற்றில் நடந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். பி.எச்.பியசேன பயணித்த மோட்டார் சைக்கிள் தனியார் பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் அக்கறைப்பற்றுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## ஆண்டு விழாவும் சிலை திறப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் சங்கிலிய மன்னனின் சிலை திறப்பு விழாவும் 78 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சங்கிலியன் அரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வு மாலை 5.30 மணிக்கு முத்திரை சந்தையிலுள்ள சங்கிலியன் உருவச்சிலை முன்றிலில் இருந்து பாரம்பரிய கலாசார நிகழ்வுகளுடன் விருந்தினர்கள் சங்கலியன் மன்றத்துக்கு அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும். அத்துடன் சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணம் சக்ஸபோன் சகோதரர்களின் நாதன இசைச் சங்கமமும் இடம்பெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் மருத்துவர் பிஎ்பு.ஜனகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ. இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

**வீடு வாடகைக்கு**

ஐந்து அறைகளைக் கொண்ட விசாலமான வீடு (இணைந்த குளியலறைகள் இரண்டுடன் கூடிய) விசாலமான வாகனத் தரிப்பிடத்துடன் கொண்ட வீடு கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியில் வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது). (CS 23945)(3/6)

தொடர்பு:
077 881 9893, 077 071 8271

# வெடியரசன் கோட்டையை பௌத்த சின்னமாக்காதீர்!

## ஜனாதிபதிக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்



**யாழ்ப்பாணம், மார்ச் 19**

**தமிழர் தம் பண்பாட்டு, மரபியல் அடையாளமாகப் பேணும் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை பௌத்த தாது கோபுரத்தின் எச்சமாக நிறுவுவதற்காகத் தொல்பொருளியல் திணைக்களத்தால் மிகத்துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவரும் முனைப்புகளைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.**

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கி.மு.200 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், தொல்புரம், பூநகரி, மன்னார் போன்ற பகுதிகளை ஆட்சிசெய்த ஈழத் தமிழ் மன்னனான விஷ்ணுபுத்திர வெடியரசன் காலத்தில் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டை அமைக்கப்பட்டது.

நெடுந்தீவு மண்ணின் கோட்டைக் காடு என அழைக்கப்படும் நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் இன்றும் தமிழர் தம் பண்பாட்டு, மரபியல் அடையாளமாக இது பேணப்பட்டு வருகின்றது.

பௌத்தம் என்பது ஒரு மத அடையாளமே அன்றி சிங்கள இனத்துக்கான அடையாளம் அல்ல என்பதை அடியோடு மறுத்து தமிழினத்தின் மீது கட்டமைக்கப்பட்ட பண்பாட்டுப் படுகொலையை நிகழ்த்துவதென்பது, இந்த நாட்டின் ஆட்சியாளரான தங்களின் தாராளவாதம் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை 'துறவிமடம்' என்னும் பெயரிலான தொல்லியல் ஒதுக்கிடமாக வெளிப்படுத்தி 2020.11.26ஆம் திகதிய, 2203/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை வெளியிடப்பட்டமை பற்றி துறைசார் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கு 2020.12.18 ஆம் திகதி நான் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தும் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவின் மாவிலி இறங்குதுறையிலும், கோட்டைப் பகுதியிலும் புதிதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள சிங்களம் மற்றும் ஆங்கில மொழியிலான விளம்பரப் பலகைகளில் தற்போதுள்ள கோட்டையின் பாகங்கள் பௌத்த தாதுகோபுரத்தின் எச்சங்கள் எனக் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் மூலம் மிகப்பாரதூரமான வரலாற்றுத் திரிபுக்கான முன்னகர்வுகள் தொல்பொருளியல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் சுதேசிய இனமான தமிழ்த் தேசிய இனத்தின் தொன்மம்மிகு அடையாளங்களை சிதைத்தழித்து, தொல்பொருள் என்ற போர்வையில் அவற்றை சிங்கள பௌத்த அடையாளங்களாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவும், நெடுந்தீவு விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை தொடர்ந்தும் தமிழர்களின் பாரம்பரிய அடையாளமாக ப் பேணிப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு, மக்களின் கோரிக்கையாக இதை தங்களுக்கு முன்னளிப்புச் செய்கிறேன் - என்றுள்ளது. (எ-125)

# உடைமையில் கஞ்சா ஒருவர் கைதானார்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஊர்காவற்றுறைப் பகுதியில் உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற நபரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் சோதனையிட்டபோதே கஞ்சா வைத்திருப்பது தெரியவந்தது. அதனையடுத்து வட்டுக்கோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதான நபரொருவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஆயிரத்து 100 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14, 23)

# கஞ்சாவுடன் கைது; நபருக்குத் தண்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

சாட்டி சுற்றுலா கடற்கரைப் பகுதியில் கஞ்சாவுடன் கைதான நபருக்கு கடந்த வியாழக்கிழமை தண்டம் விதிக்கப்பட்டது.

சாட்டி சுற்றுலா கடற்கரை பகுதியில் ஆயிரத்து 300 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குருநகர் பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீமன்றத்தில் நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஒ-14,23)

# யாழ். நகரப் பகுதியில் திருட்டு சந்தேகநபர்களுக்கு மறியல்




யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலுள்ள கடையொன்றில் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை திருடிய குற்ற ச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லி வீதிப் பகுதிலுள்ள கடையொன்றை உடைத்து 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். (ச-23)



# காரைநகரில் திருட்டுக் கும்பல் மடக்கிப் பிடிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 19

காரைநகர் - கோவளம் பகுதியிலுள்ள வீடொன்றில் திருட்டில் ஈடுபட முயற்சித்த கும்பலை அந்தப் பகுதி மக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைப்பு செய்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை காரைநகர் - மணற்காடு அம்மன் ஆலய வருடாந்த உற்சவ வேளையில் இடம்பெற்றுள்ளது.

திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட பட்டாரக வாகனமும் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம், பண்டத்தரிப்பு மற்றும் காரைநகர் பகுதிகளைச் சேர்ந்த ஜரையே பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச)

# காதலிப்பதாகக் கூறி பதின்ம வயதுச் சிறுமியை அழைத்துச் சென்றவர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 19

காதலிப்பதாகக் கூறி 14 வயதுச் சிறுமியை அழைத்துச் சென்ற 20 வயதான இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார், சிறுமியும் மீட்கப்பட்டுள்ளார் என தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த சிறுமி பாடசாலை சென்றவேளை இளைஞர் புதுக்குடியிருப்பு பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் பெற்றோரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பு அதிகாரி தலைமையிலான குழுவினர் முன்னெடுத்த விசாரணையில் புதுக்குடியிருப்பு பகுதியில் சிறுமி மீட்கப்பட்டார், அத்துடன் அழைத்துச் சென்ற இளைஞரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருவரையும் சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











## செயற்பட்டு மகிழ்வோம்

**யாழ்ப்பாணம், மார்ச் 19**

**சங்கானை கல்விக்கோட்டத்துக்குட்பட்ட துணவி அ.மி.த.க. பாடசாலையின் 2023 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா, அதிபர் வைகுந்தநாதன் பிரதீபன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.** நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத்தின் நிர்வாக இயக்குநரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமாகிய ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொண்டு விளையாட்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நிகழ்வின் இறுதியில் மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார். (ஒ-14,125)

## அரசின் நெல் கொள்வனவிலிருந்து யாழுக்கு 20,000 அரிசிப் பொதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நெற்செய்கை விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு முதற்கட்டமாக 20 ஆயிரம் அரிசிப் பொதிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தால் நெற்செய்கைக் கொள்வனவுக்கென முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தனியார் நெல் ஆலை உரிமையாளர்கள் ஊடாகவும் கமநலசேவை திணைக்களங்கள் ஊடாகவும் விவசாயிகளிடம் இருந்து 100 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான அரச நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் முல்லைத்தீவு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல், யாழ். மாவட்ட மக்களுக்கான அரிசி விநியோகத்துக்காக முதலாவது கட்டமாக 2 ஆயிரம், 10கிலோகிராம் அரிசிப்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன. (ஒ-14.19)

## பாக்கு ஏற்றுமதி தடை; உற்பத்தியாளர் பாதிப்பு!

### சிறு கைத்தொழிலாளர்கள் தேசிய சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19



வெளிநாட்டிலிருந்து கொட்டைப் பாக்கை இறக்குமதி செய்து மீள் ஏற்றுமதி செய்யும் வர்த்தகம் இடம்பெறுவதால் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை சிறு கைத்தொழிலாளர்கள் தேசிய சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

வர்த்தக அமைச்சுக்கு முன்னால் நேற்று போராட்டம் ஒன்றை நடத்தி இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

வர்த்தக அமைச்சர் பெரிய வர்த்தகர்களுக்கு ஆதரவளித்து உள்ளூர் உற்பத்தியாளர்களின் கொட்டைப் பாக்கு ஏற்றுமதியை தடைசெய்துள்ளார். வெளிநாட்டிலிருந்து பாக்கை இறக்குமதி செய்து மீள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் உள்நாட்டு கொட்டைப்பாக்கு உற்பத்தியாளர்கள் பாதிப்படைகின்றனர் என போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (ச-இ)

## சிறுவனை மோதி விட்டு தப்பியது மோ.சைக்கிள்

சாவகச்சேரி, மார்ச் 19

வீதியின் குறுக்கே சென்ற சிறுவனை, அந்தவழியில் வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்த விபத்துச் சம்பவம் ஏ-9 வீதி நாவற்குழி ஐந்து வீட்டுச்சந்தியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த சிறுவனை அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். இதேவேளை - மோட்டார் சைக்கிளில் விபத்தை ஏற்படுத்தி தப்பிச்சென்ற நபர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திரத்தைக் குறைக்க நாட்டில் 'கோப அறை'

## முதல்முறையாகத் திறப்பு



கொழும்பு, மார்ச் 19

மனஅழுத்தத்தை முறியடித்து புதியவராக வெளியேற இலங்கையில் முதன்முறையாக 'கோப அறை' அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் 'கோப அறை' பத்திரமுல்லை கொஸ்வத்தையில் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டுள்ளது. பொருள்களின் விலைவாசி அதிகரிப்பு மற்றும் கட்டணங்கள் உயர்வு உள்ளிட்டவற்றால் மக்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுக்கமுடியாது திணறி வருகின்றனர். அதனால் பல்வேறு மன அழுத்தங்கள் ஏற்படுவதுடன் வன்முறைக்கும் அவை தூண்டப்படுகிறது.

அதன் பின்னணியில், நாட்டில் முதலாவதாக இந்த 'கோப அறை' திறக்கப்பட்டுள்ளது. இந்த அறைக்கு தனி நபர்கள் அல்லது நண்பர்களாக இணைந்து வந்து பொருள்களைத் தேர்ந்தெடுத்து அடித்து உடைக்கலாம். இதன் மூலம் அவர்கள் கோபம் குறைவடையும். பின்னர் மன அழுத்தத்தை முறியடித்து புதியவராக அங்கிருந்து வெளியேறலாம் என இந்த அறையை நிறுவியவரான ஷவீன் பெரேரா தெரிவித்தார். (ச-இ)

## கர்ப்பம் எனக் கூறி பணம் பறித்த தாதி!

### பலாங்கொடையில் மோசடி

கொழும்பு, மார்ச் 19

வயிற்றுவலிக்கு சிகிச்சைபெற மருத்துவமனைக்குச் சென்ற யுவதியிடம் கர்ப்பமாக உள்ளீர்கள் எனக் கூறி பணமோசடி செய்யப்பட்டுள்ளது என பாதிக்கப்பட்ட யுவதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் பலாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த யுவதி வயிற்றுவலி காரணமாக தனது பாட்டியுடன் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

அங்கு பணிபுரியும் பணிப்பெண் ஒருவர் யுவ்தியின் பாட்டியிடம் உங்கள் பேர்த்தி கர்ப்பமாகவுள்ளார் . அதனை நீக்குவதற்கான மருந்து கொடுப்பதற்கு 43 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு கூறி பணமோசடியில் ஈடுபட்டுள்ளார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது. முறைப்பாட்டுக்கமைய பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## நுணாவில் சிறுவர் பூங்காவுக்கு உபகரணங்கள் வழங்குங்கள்

### சாவகச்சேரி நகரசபை கோரிக்கை

சாவகச்சேரி நகரசபையால் நுணாவிலில் அமைக்கப்பட்டு வரும் சிறுவர் பூங்காவுக்கு உபகரணங்கள் மற்றும் பூக்கன்றுகள் வழங்க நலன்விரும்பிகள் முன்வரவேண்டும் என்று சாவகச்சேரி நகரசபை கோரிக்கை விடுத்துள்ளது.

சாவகச்சேரி நகரசபை அமர்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

சபையின் பெருமளவு நிதி ஒதுக்கீட்டில் காணி கொள்வனவு மற்றும் காணி பாதுகாப்பு போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏனைய பணிகளை மேற்கொள்ள தாமதமாகும் என்பதால் சிறுவர் பூங்காவுக்குத் தேவையான உபகரணங்கள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் பூங்காவை அழகுபடுத்தும் பூக்கன்று வகைகள் வழங்க விரும்புவோரிடம் உதவிகள் கோர வேண்டும் என்று சபை உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

அதற்கமைய நன்கொடையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் சிறுவர்களின் நலன்கருதி பூங்காவுக்குரிய உபகரணங்களை வழங்குமாறு சபையில் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஒ-14-9)

## பெண்களுக்கு சுயதொழில் இலவச பயிற்சி வகுப்புகள்



மன்னார் மாவட்டத்தில் தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தில் பெண்களுக்கான சுயதொழில் இலவச பயிற்சியின் இரண்டாவது வகுப்பு கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் வழிகாட்டலில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் நிதி அனுசரணையில் 45 பெண்களுக்கான 4 நாள்கள் கொண்ட இலவச பயிற்சி வகுப்புகள் கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

அதன் இரண்டாவது பெண்கள் அணிக்கான பயிற்சி வகுப்புகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் நேற்று வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றன.

பயிற்சி வகுப்பில் சவர்க்காரம், சலவைத்தூள், கிருமித்தொற்று நீக்கி திரவங்கள், ஷம்போ, சொட்டு நீலம் போன்றவை தயாரிக்கும் வழிமுறைகள் கற்றுக்கொடுக்கப்பட்டன.

பயிற்சி வகுப்பின் வளவாளராக அண்மையில் சர்வதேச மகளிர் தினத்தில் சிறந்த தொழில் முயற்சிக்கு 'அவள் தேசத்தின் பெருமைக்குரியவள்' என்னும் ஜனாதிபதி விருதைப் பெற்ற மஞ்சுளா சற்குணராஜா செயற்பட்டார். (ஒ-14-213)

## ரத்நாயக்கவின் அலுவலகத்தில் விஷமச் செயல் நடக்கவில்லை!

### பொலிஸார் அறிக்கை

கொழும்பு, மார்ச் 19

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவின் அலுவலகத்தில் கிடைத்த ஆவணங்களில் அரச விரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல் எதுவும் வெளியாகவில்லை என கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினர்.

கொள்ளுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த சிலர் குறித்த அலுவலகத்தில் இருக்கும் முக்கியமான ஆவணங்களை அழிக்கத் திட்டமிடுகின்றனர் என பொலிஸாருக்கு முறைப்பாடளிக்கப்பட்டது.

அதனையடுத்து கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் கோட்டை நீதிமன்றுக்கு தெரியப்படுத்தி பெறப்பட்ட உத்தரவுக்கமைய அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டது.

ஜனக ரத்நாயக்க தற்போது வெளிநாட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் அவர் நாடு திரும்பியதும் மேலதிக விசாரணைகள் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த விசாரணைகளுக்காக அவரது அலுவலகத்திலிருந்து 20 ஆவணங்கள் மற்றும் 2 கடிதங்கள் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டுள்ளன.

ஆயினும் அதில் எந்தவொரு அரசாங்க விரோதச் செயற்பாடுகள் எவையும் இடம்பெறவில்லை என்று கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தினர். (ச-இ)

## புலமைப் பரீட்சையில் குழப்பகர வினாக்கள்

### வலி. வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 19

2022ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் மாறுபட்ட வகையில் வினாக்கள் இடம்பெற்றிருந்தமையால் மாணவர்கள் குழப்பநிலை அடைந்தனர் என வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மதியழன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் மாணவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் மாறுபட்ட வினாக்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் கற்பித்ததைவிடப் பிள்ளைகள் தாங்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் பரீட்சையை எழுதக் கூடிய வகையில் பரீட்சை வினாத்தாள் அமையவில்லை.

இதனால் வழங்கப்பட்ட குறித்த நேரத்தில் விடையளிக்கமுடியாது மாணவர்கள் குழம்பமடைந்தமையை அவதானிக்க முடிந்தது. குழப்பகரமாகத் தயாரிக்கப்பட்ட இந்தப் பரீட்சை வினாத்தாள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவதானம் செலுத்தவேண்டும் - என்றார். (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பிராசா பொன்னம்மா



தோற்றம் : 18.09.1935 மறைவு : 16.03.2023

ஆதிமயிலிட்டியை பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தம்பிராசா பொன்னம்மா கடந்த (16.03.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து நாகமுத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு ம்ருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சின்னத்தங்கம் காலஞ்சென்ற தம்பிராசா, காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சங்கரப் பிள்ளை, தங்கம்பிள்ளை, செல்வநாயகி, சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், திருநாவுக்கரசு (யாழ்-கொழும்பு ஹயஸ் வாகன உரிமையாளர்- ஈசன்), கமலாகரன் (இந்து - சுவிஸ்), கமலராணி (வசந்தா) காலஞ்சென்ற ஸ்ரீதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுமதி, தயாளினி (சுவிஸ்), முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜனந்தன் (பிரான்ஸ்), தர்சிகா (சுவிஸ்), கஜந்தன், வாகினி (கனடா), மிதிலா, நிரூஷன், டிலக்ஷன் (பிரான்ஸ்), நிலாணி (சுவிஸ்), செந்துஜன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், சந்தோஸ் (சுவிஸ்), ஹிர்ஷானி, நிதிஷ் (கனடா), ஆதிஷ் (கனடா), கிருத்விக் (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2023) திங்கட் கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 2313 091**

**காங்கேசன்துறை வீதி,**
**மல்லாகம்.**
**(காங்கேயன் பேக்கரி அண்மையில்)**

(CS 24059)1-6

# மரண அறிவித்தல்

## திருமதி இரத்னசிங்கம் பாக்கியலட்சுமி

**தோற்றம்**
**19.01.1950**

**மறைவு**
**17.03.2023**



வராகி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்னசிங்கம் பாக்கியலட்சுமி கடந்த (17.03.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்னசிங்கத்தின் பாசமிகு மனைவியும், இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி, சாந்தினி, இந்திரன், சிவபாக்கியம், சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனராஜா (லண்டன்), பாஸ்கரன், காலஞ்சென்றவர்களான சிவனேசராசா, பிறேமா மற்றும் சுபாஷினி, இராஜேஸ்வரி (ராசம்), இராஜேஸ்வரன், விஜயராணி, ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனியும், ரமேஸ் (லண்டன்), சுஹாசினி (பாப்பா), மைதிலி (ரமா - கனடா), தயாளன், தனுஷன் (தினேஷ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாநந்தினி, ரமேஸ், துஷ்யந்தன், கஜீபா, பவியா, சுலோசனா (கவிதா), பேருஷாளி (சுவிஸ்), தனுவர்ணன், பபிகேஷன், டிலக்ஷன், டனிஸ்ரன் ஆகியோரின் மாமியாரும், ஆருஷன், ரித்திக், ஆராதனா, ஆதிரன், டேனுஜா, கிருஜா, இனியா, பிரார்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தனதீசன் (தீசன்), காலஞ்சென்ற விதுசன் மற்றும் மிதுர்சிகா, யதுசன், கபிஷனா ஆகியோரின் அன்புப் பெரிய தாயும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 'கோப அறைகள்' போதுமா?

**2022** ஆம் ஆண்டு தமது உயிரை மாய்த்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை மிகமிக அதிகமாகவுள்ளது என்று சுகாதாரத்துறையின் உளவளப் பிரிவு எச்சரித்துள்ளது. இதன்படி 3 ஆயிரத்து 406 பேர் கடந்த வருடம் தமது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளனர். ஒவ்வொரு 4 மணிநேரத்துக்கும் ஒருவர் என்ற அடிப்படையில் இந்த இறப்பு விகிதம் உள்ளது என்றும், பொருளாதார நெருக்கடி, மனநோய், தீராத நோய்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை என்பனதான் இவ்வாறு ஆயிரக் கணக்கானவர்கள் தவறான முடிவெடுத்து தமது உயிரை மாய்த்துக்கொள்ளக் காரணமாக அமைந்திருக்கின்றது என்றும் உளவளப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வரலாற்றில் 2022 ஆம் ஆண்டென்பது ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலைதான். பொருளாதார ரீதியாகவும், வாழ்வாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இலங்கையர்கள் அனைவரும் ஆகப்பெரும் வதைகளை எதிர்கொண்ட ஆண்டு அது. தமிழர்களுக்கு இது வழக்கமானதுதான் என்றாலும், 2022 ஆம் ஆண்டில் இனம், மதம், மொழி என்ற ரீதியாக அல்லாமல் பொதுமைப்படுத்தப்பட்ட விடயமாக இந்தத் துன்பியல்கள் அமைந்திருந்தன. இதனால், கடந்த ஆண்டின் துயர்க்கதை இவ்வாறான புள்ளி விவரங்கள் மூலமாகத் தெரியவரும் என்பது என்றோ எச்சரிக்கப்பட்ட விடயம்தான். தொண்டு நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புக்கள் அபாயச் சங்காக இந்த எச்சரிக்கையை மாறிமாறி விடுத்தபோதிலும் அரசாங்கத்துக்கு அது 'செவிடன் காதில் சங்கு ஊதிய நிலையாகவே' அமைந்திருந்தது. தற்போது அந்த எச்சரிக்கைகளின் கனதி இந்த உயிர்மாய்ப்பு எண்ணிக்கைகள் மூலமாக மெய்ப்பட்டிருக்கின்றது.


கடந்த ஆண்டில் மட்டுமல்ல இந்த ஆண்டிலும் இதே நிலைதான் தொடர்கின்றது. வடக்கு மாகாணத்திலும் தேசிய ரீதியிலும் தவறான முடிவெடுத்து உயிரிழப்போரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்த வண்ணமுள்ளது. இதைக் கட்டுப்படுத்தக்கூடிய திட்டங்கள் இல்லாமல் வெறும் குறிப்பேட்டில் தரவுகளை சேகரிப்பதுதான் அரசாங்கம் தற்போது ஆற்றும் ஆகப்பெரும் கடமையாக இருக்கின்றது. பொருளாதாரம் இன்னமும் மீண்டபாடில்லை. பொருளாதார நெருக்கடி மேலும் இறுகலாம் என்றுதான் நிபுணர்கள் மாறிமாறி எச்சரித்து வருகின்றனர். இவை எல்லாமும் சேர்ந்து இலங்கையர்களை தற்போது மொத்தமாக வதைத்துக் கொண்டிருக்கும் நிலையில், ஓர் உள ஆற்றுப்படுத்தல் இலங்கையர்கள் அனைவருக்கும் இப்போது தேவைப்படுகின்றது.

ஆனால், உள ஆற்றுப்படுத்தலின் அவசியம் இலங்கை அரசாங்கத்துக்குப் புரியாத மொழி. அதற்குத் தெரிந்ததெல்லாம் 'காயப்படுத்தல்' மட்டும்தான். 2009 ஆம் ஆண்டு இறுதிப்போர் முடிவடைந்த பின்னர், தமிழ் மக்களின் உளநலனைக் கருத்திற்கொண்டு தீவிர வேகத்தில் ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படி எத்தனையோ அமைப்புக்கள் எச்சரித்தன. இத்தனைக்கும் எத்தனை சிறப்புச் செயற்றிட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்தது என்று கேட்டால் பதில் 'பல்லிளிக்கும்'. ஓர் உள்நாட்டுப் போரை உச்ச வேகத்தில் முன்னெடுத்த பின்னர் மேற்கொள்ளாத ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை பொருளாதாரப் பேரிடரின் பின்னர் அரசாங்கம் செய்துவிடப் போகின்றது ? எனினும் தற்போது இலங்கையில் 'கோப அறைகள்' திறக்கப்படவுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. ஒருவர் தனது உள நெருக்கீட்டை, அழுத்தத்தை ஓரளவேனும் தீர்த்துக் கொள்ளும் வகையில் மேற்குநாடுகளில் இத்தகைய 'கோப அறைகள்' பிரபலம். அங்குள்ள கோப அறைகளுக்குள் நுழையும் நபர்கள், தமது கோபம், அழுத்தம், நெருக்கீடு என்பன தீரும்வரை , அந்த அறையில் இருக்கும் எந்தப்பொருளையும் அடித்து நொருக்கலாம். இதனால் ஓரளவுக்கேனும் அவர்களின் உளநெருக்கீடு சமநிலை பெற்று, அந்த நபர்களால் சமூகமட்டத்தில் அல்லது குடும்பரீதியில் உண்டாகும் வன்முறைகள் இல்லாமற்போகும் சாத்தியங்கள் உண்டு. இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே இலங்கையிலும் கோப அறைகள் உருவாக்கப்படவுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இப்போது பொருளாதார, அரசியல் ரீதியாக இலங்கையர்களுக்கு உள்ள நெருக்கடிகளுக்கு, கோபத்துக்கு, மன அழுத்தத்துக்கு வீட்டுக்கு வீடு நாலைந்து 'கோப அறைகள்' உருவாக்கப்பட்டாலும் அவர்களின் உளநெருக்கீடுகள் தீருமா என்பது சந்தேகமே.

## நாளொரு நல்வார்த்தை

"அன்புடன் கேட்கவேண்டும்; புத்திசாலித்தனமாக பதில் சொல்லவேண்டும்; நிதானமாக யோசிக்கவேண்டும்; பாரபட்சமின்றி தீர்ப்பு வழங்கவேண்டும்"

**– சோக்ரட்டீஸ்**




# போதைப்பொருள் சட்டங்களை தவறாகப் பயன்படுத்தும் பொலிஸ்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 19**

**போதைப்பொருள் வைத்திருப்பது தொடர்பான சட்டங்களை சில பொலிஸ் நிலையங்கள் மீறுகின்றன என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
போதைப்பொருள் தொடர்பான பல வழக்குகள் சில பொலிஸ் நிலையங்களில் பொய்யாகப் பதியப்படுகின்றன என்று அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கைகள் நிரூபித்துள்ளன. சந்தேகநபர்கள் போதைப்பொருள்களாகக் கருதப்படும் பொருள்களுடன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இருப்பினும், இது தூள் பனடோலாகவும் இருக்கலாம். அரசாங்கப் பகுப்பாய்வாளர் அறிக்கை பல மாதங்களுக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும்போது, அந்தப் பொருள் சட்டவிரோதமான பொருள் அல்ல என்று தெரிவிக்கப்படுகின்றது. இது நியாயமற்ற நிலை.
பழிவாங்கும் நோக்கில் சில சந்தேகநபர்களுக்கு எதிராக போதைப்பொருள் தொடர்பான வழக்குகளை பொலிஸார் தவறாகப் பதிவு செய்கின்றனர் - என்றார்.

(எ-இ)

# அனுமதியின்றி கட்டப்பட்ட சிலை நகரசபை மௌனம் காப்பது ஏன்?

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி

வவுனியா, மார்ச் 19

வவுனியா நகர் பகுதியில் அனுமதியின்றிக் கட்டப்பட்ட பத்மநாபாவின் சிலை தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் - இவ்வாறு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்தார்.
வவுனியா பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கு.திலீபன் தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
போராடிய தலைவர்களுக்கு சிலை வைப்பதை நான் எதிர்க்கவில்லை. ஆனால், முறையான அனுமதிகள் பின்பற்றப்பட்டதா? வவுனியா மாவட்டத்தில் முச்சக்கர வண்டியை வாழ்வாதாரமாகக் கொண்ட முச்சக்கர வண்டி சங்கத்துக்கு அலுவலகம் அமைக்கப்பட்டபோது முறையான அனுமதி பெறப்படவில்லை எனத் தெரிவித்து அந்தக் கட்டுமானப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. நாளாந்த வாழ்வாதாரத்துக்காக வியாபாரம் செய்யும் வீதியோர வியாபாரிகள், தள்ளுவண்டி வியாபாரிகள் ஆகியோரை நகரசபை, குற்றவாளிகள் போல் அவர்களது பொருள்களுக்கும் சேதம் விளைவித்து அள்ளிச்செல்கின்றது. வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் பத்மநாபாவின் சிலை வைப்பதற்கு முறையான அனுமதி பெறப்பட்டதா? நகரசபையினர், செயலாளர் என்ன செய்கின்றனர்? உள்ளூராட்சித் திணைக்களம் என்ன செய்கிறது? - என்றார்.

(எ-18)

**நாளை** 20.03.2023
திங்கட்கிழமை
பங்குனி 06

சுபநேரம் : 12.18 - 01.48
ராகுகாலம் : 07.48 - 09.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிதம்**

தரம் - 06 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

**0777 122 968**

(CS23940)1-6

**சைவ உணவகத்துக்கு பணியாளர் தேவை**

சமையற்காரர், மேற்பார்வையாளர் மற்றும் அனைத்து வேலைகளுக்கும் ஆள்கள் தேவை. (அசைவ உணவகத்துக்கும் தேவை)

**077 055 6949 -ஆனைக்கோட்டை**

**வேலைவாய்ப்புக்கள்**

அனுபவமிக்க மேற்பார்வையாளர், கிளீனர், ரூம்போய், சமையல் உதவியாளர் உட்பட சகல பணிகளுக்கும் உடனடி வேலை வாய்ப்பு. நேர்முகத் தேர்வு. கவர்ச்சிகரமான சம்பளம். தொடர்பு:

**முகாமையாளர்**
**ஞானம்ஸ் ஹோட்டல் & ரெஸ்ரோரன்ஸ்**
**யாழ்ப்பாணம்.**

**07044 96 525**


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 . 09 . 1941 | 17 . 03 . 2023 |

## செல்வி சரஸ்வதி (ராணி)

யாழ்ப்பாணம் நீராவியடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி சரஸ்வதி (ராணி) நேற்று முன்தினம் (17.03.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அவர் நீராவியடி காலஞ்சென்ற கனகரத்தினம் கமலாம்பிகையின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் தனபாலசிங்கம் (Yarl Metal) அவர்களுடைய அன்பு தங்கையும் தனபாலசிங்கம் நந்தராஜ் (இத்தாலி), தனபாலசிங்கம் துஷ்யந்தராஜ் (U.K) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயபாலசிங்கம், பத்மாவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு தமக்கையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ்- ஓட்டுமடம் இன்பம் மலர்ச்சாலையில் (Funeral Parlour) நடைபெற்று, யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்தில் முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைகள் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**நீராவியடி, யாழ்ப்பாணம்.**
**0773723596**
**0212223042**

**தகவல்:**
**திருமதி புஸ்பவதி கணேசலிங்கம்**

(CS 23927)1-6

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 . 09 . 1938 | 18 . 03 . 2023 |

## திரு.பிறஞ்சிப்பிள்ளை மரியநாயகம்

சில்லாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிறஞ்சிப்பிள்ளை மரியநாயகம் நேற்று (18.03.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிறஞ்சிப்பிள்ளை றோசமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் மரியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், றோசரிமலரின் அன்புக் கணவரும், ஜோண்றாஜகுமார் (தபால் ஊழியர், பண்டத்தரிப்பு) காலஞ்சென்றவர்களான அருள் அல்பேட், பிரான்சிஸ் சேவியர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், எல்சி, அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற யூலியற் ஏஞ்சலின் மற்றும் மரியற் கிறிஸ்ரலின், கதிர் இனியன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் வர்களான திரேசாபுஸ்பம், சூசைப்பிள்ளை மற்றும் றெமூந்துப்பிள்ளை, ஆரோக்கியநாதர், அமிர்தநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான தேவதாஸ், அல்போன்ஸ் சிங்கராயர் மற்றும் அக்னேஸ், சகாயநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (20.03.2023) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு: 077 5262 030**
**021 205 1908**
**றோசறி இல்லம், சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு.**

**தகவல்:**
**ம.ஜோண் றாஜகுமார் - (மகன்)**

(CS 24066) 1/6

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 . 01 . 1936 | 18 . 03 . 2023 |

## வேலுப்பிள்ளை பரமேஸ்வரி

கைதடி மேறகைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமேஸ்வரி நேற்று (18.03.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் சேதுப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா முத்துப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின்(கிளாக்கர்) அன்பு மனைவியும், அமரர் செல்வக்குமார், நாகநந்தினி, உதயராணி, செபசீலனின் அன்புத்தாயாரும், சியாமளா, வற்சலா, ரஞ்சினி, வதனி, நளினி, நாரநந்தினி, சிவராசா, வவி, ராகினி ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், அமரர் முத்துக்குமாரசாமி, அமரர் கதிர்காமநாதன், அமரர் மகேஸ்வரி மற்றும் செல்லம்மாவின் அன்புச் சகோதரியும், குமாரசாமி(நந்தினி ஸ்ரோர்ஸ்), ஜெயலிங்கம், புவனராணி, உதயன், கிருஸ்ணவேல், தவேந்திரன், சுபேந்திரன், வசந்தா, வனிதா, அரசேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் சுப்பையா, அமரர் தம்பித்துரை, தங்கரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், பவஷாந், தர்ஷிகா, ருசாந், கவிஷாந், அனோஜ், மிதுஷா, பிரியன், மாதுலன், பவிஸ்ணன், சஜிஸ்ணன், கரிஸ்ணன் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**077 833 1440**

(CS 24068)(5/6)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 10 . 1957 | 18 . 03 . 2023 |

## செல்வி தம்பையா பவளமலர்

சுழிபுரம், மூளாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தம்பையா பவளமலர் நேற்று (18.03.2023) காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி தம்பையா JP (முன்னாள் தபால் அதிபர்) சிவபாக்கியவள்ளிநாச்சன் தம்பதியினரின் அன்பு கனிஷ்ட மகளும், காலஞ்சென்ற பொன்மலர் (முன்னாள் தர்மகர்த்தா மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோவில் முன்னால் இயக்குனர் INS-GD) மற்றும் இராமச்சந்திரன் (பொறியியலாளர் கொழும்பு), விக்னராசா (ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி), விக்னராணி (ஐக்கிய அமெரிக்கா), மகாராணி (கனடா), அழகராஜா (கணக்காளர் கனடா) ஆகியோரின் அருமை இளைய சகோதரியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரன் (முன்னாள் ஆசிரியர் - முன்னாள் இயக்குனர் INS-GD) மற்றும் கமலாம்பிகை (கொழும்பு), காலஞ்சென்ற சாந்திகுமாரி (முன்னாள் சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்) மற்றும் கனகராயர் (ஓய்வூதியர் ஐக்கிய அமெரிக்கா), யோகலிங்கம் (சட்ட ஆலோசகர்- கனடா), கருனேஸ்வரி (ஆசிரியர், கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிலானி-எண்குணன் (அவுஸ்திரேலியா), கலானி (விரிவுரையாளர்) தனஞ்செயன் (பொறியியலாளர்) (கொழும்பு), சங்கீதா- அருணன் (ஐக்கிய இராஜ்ஜியம்), சவீந்திரா (சட்டத்தரணி)- ஜெரீன் (மூளாய்), சஞ்சேந்திரா (சட்டத்தரணி கொழும்பு), அர்ச்சனா - புவிதரன் (கனடா), அனந்தன் - ஷிவானி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுஷா-அருளம்பலம் முரளி (ஐக்கிய அமெரிக்கா), கவிதா -சுகுணன் (ஐக்கிய அமெரிக்கா), கிருஸ்ணா (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு சித்தியும், ஜஸ்னி, செஷான், ஷர்விதா, அக்ஷியா, உதேசன், ஷயானா, ஷவீன், ஷய்ரா, ஸ்ரீராம், கார்த்திக், லக்ஷ்மி, விஷ்ணு, பரதன், அமிர்தன், சந்தனா, ஆர்யா ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மூளாயிலுள்ள அவரது சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உறறார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: சகோதரன்**
**இ.த.விக்னராசா**
**(ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி)**
**-021 2250761**
**வி. சவீந்திரா -மருமகன்**
**(சட்டத்தரணி) -0776242624**

(CS 24066) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ministry Of Education
(Skill Development, Vocational Education, Research and Innovation Sector)

**NAITA**
National Apprentice and Industrial Training Authority



# நிபுணர்களை உருவாக்க நிபுணத்துவம் அழைக்கப்படுகிறது

**தேசிய பயிற்சி மற்றும் தொழில்துறை பயிற்சி ஆணையம்**

**வருகை விரிவுரையாளர்கள் மற்றும் பயிற்றுனர்கள் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு**

### ஆட்டோமொபைல் இன்ஜினியரிங் பயிற்சி நிறுவனம் - ஊருகொடவத்தை

- ஆட்டோமொபைல் மெக்கானிக்
- ஆட்டோமொபைல் எலக்ட்ரிக்கல்
- மெஷினிஸ்ட்/ சிஎன்சி
- ஆட்டோமொபைல் ஏர் கண்டிஷன் மெக்கானிக்
- ஆட்டோமொபைல் ரிங்கர்
- ஆட்டோமொபைல் பெயின்டர்

### தொழில்துறை பொறியியல் பயிற்சி நிறுவனம் - கட்டுபெத்த

IETI Moratuwa

- வெல்டர்
- மெஷினிஸ்ட்
- எலக்ட்ரீசியன் (மெகாட்ரானிக்ஸ்)
- எலக்ட்ரீஷியன் (டிஜிட்டல்)
- எலக்ட்ரீசியன் (பவர் எலக்ட்ரிக்கல்)
- குளிர்பதன மற்றும் ஏர் கண்டிஷனிங் டெக்னீஷியன்
- எலக்ட்ரானிக்ஸ்
- கட்டுமான தள மேற்பார்வையாளர்
- பிளம்பர்
- வரைவாளர்
- உதவி அளவு கணக்கெடுப்பு
- கம்ப்யூட்டர் கிராஃபிக் டிசைனர்
- தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப தொழில்நுட்ப வல்லுநர்
- மர கைவினைஞர் (கூட்டிடம்/ தளபாடங்கள்)
- அலுமினியம் பேப்ரிகேட்டர்

### தகுதி மற்றும் அனுபவம்
மேற்கண்ட துறைகள் தொடர்பான டிப்ளமோ அல்லது அதற்கு சமமான அல்லது மேம்பட்ட படிப்பு. குறைந்தது ஒரு வருட ஆசிரியர் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**மொழிமூலம் - சிங்களம்**

### பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் - கட்டுநாயக்க

- சிவில் இன்ஜினியரிங்
- எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங்
- மெக்கானிக்கல் இன்ஜினியரிங்

### தகுதி மற்றும் அனுபவம்
இந்த துறைகள் தொடர்பான பட்டம் அல்லது அதற்கு சமமான மேம்பட்ட படிப்பு. குறைந்தது ஒரு வருட ஆசிரியர் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**மொழிமூலம் - ஆங்கிலம்**

**கொடுப்பனவுகள் - நேர்காணலின் போது தீர்மானிக்கப்படும்.**

**வயது** - 22-60க்குள் இருக்க வேண்டும்

**மாவட்ட பயிற்சி மையங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது**

**நிபந்தனைகள்**

அரச கூட்டுத்தாபனங்களின் சட்டப்பூர்வ சபைகள் மற்றும் திணைக்களங்களில் தற்போது பணிபுரிபவர்கள் தங்களின் நிறுவனத் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். சுய சான்றொப்பமிடப்பட்ட நகல்களுடன் உறவினர்கள் அல்லாத உங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவர் உட்பட முழு விவரங்களுடன் கூடிய விண்ணப்பம். தலைவர், தேசிய தொழிற்பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரிய என்ற முகவரிக்கு 2023.04.02 ஆம்திகதிக்கு முன்னர் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கவர் கடிதத்தின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் பயிற்சி நிறுவனம் குறிப்பிடப்பட வேண்டும்.

**Chairman,**
**National Apprenticeship and Industrial Training Authority,**
**No 971, Sri Jayawardenepura Mawatha, Welikada,**
**Rajagiriya.**

www.naita.gov.lk    Naita Sri Lanka

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SLIIT UNI THE KNOWLEDGE UNIVERSITY


# Open Day @ Jaffna, April 1st 2023

NORTHERN UNI

**School of Computing**
BSc (Hons) Specialising in:
- Information Technology
- Data Science
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering

BSc (Hons) in Computer Systems Engineering

**School of Business**
BBA (Hons) Specialising in:
- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management



## நாம் ஏன் யாழில்....?

தற்பொழுது SLIIT இன் நான்கு வருட பட்டப்படிப்பினை தொடரமுடியும்.

அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கணினி ஆய்வுகூடங்கள் மற்றும் வகுப்பறைகள்.

SLIIT மாலபே பீடாதிபதியின் தலைமையின் கீழ் அமைந்த தகுதி வாய்ந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் குழாம்.

படிப்பின் பின்னரான நிச்சயமான வேலைவாய்ப்புகள் எம்மிடம் பதிவு செய்யும் மாணவர்களுக்கு **25%** அடிப்படையிலான 6 லட்சம் வரையிலான பெறுமதி மிக்க புலமைப்பரிசில்கள்

க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களும் சித்தி இருந்தும் பட்டப்படிப்பினை தொடர முடியவில்லையா உங்களுக்கான வேலைவாய்ப்புடன் கூடிய UGCனுடைய நேரடி அனுமதி பெற்ற பட்டப்படிப்பு எம்மிடம் இருந்து

**Contact Us :-**
P.Number :- 0771471471
Address :- NorthernUNI Enrollment Office, 5th floor, MagickTech Building 218, 5/1 Stanley Road, Jaffna, Sri lanka
Web Address :- www.northernuni.lk

---



# வேலைவாய்ப்பு



**"Ammanai Saran Adainthal Athika Varamperalam"**
**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
**5 Chapel Road, London W13 9AE, Phone :- 0208 810 0835**
**Founded : 10-08-1991 Charity No: 1014409**
www.ammanealing.org
Email :- info@ammanealing.org

## Following Jobs are available at the temple

**மேலே உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். REF: SKTAT/ 03/02/2023**






**பணிநிலை 1 :- மகோற்சவ சிவாச்சாரியார் ( Hindu religious workers with non - pastoral role)**
**தகைமைகள் :-** விண்ணப்பதாரி மகோற்சவ குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.
**கடமைகள்:-** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் மகோற்சவக் குருக்களாக பூசைகள் செய்தல்.

**பணிநிலை 2 :- ஆலய சிவாச்சாரியார் ( Hindu religious workers with non - pastoral role & minsitrey of religion)**
**தகைமைகள் :-** விண்ணப்பதாரி ஆலயக் குருவாகத் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.
**கடமைகள்:-** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.

**பணிநிலை 3 :- நாதஸ்வர தவில் கலைஞர்கள் ( Hindu religious mucision workers)**
**தகைமைகள் :-** சிறுபராயம் முதல் கலை பயின்றதுடன் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணியாற்றி இருத்தல் வேண்டும்.
**கடமைகள் :-** ஆலய பூசைகளில் மங்கல இசை இசைத்தல்.

**பணிநிலை 4 :- ஆலய சிவாசாரியார் நெய்வேத்தியம் செய்பவர் ( Making Pirasatham - Food - Hindu religious worker non - pastoral role)**
**தகைமைகள் :-** ஆலய சிவாசாரியாராக மடப்பள்ளியில் 5 வருடங்களுக்குக் குறையாமல் எல்லா வகையான நெய்வேத்தியங்களும் செய்தவராக இருத்தல் வேண்டும்.
**கடமைகள் :-** ஆலய நெய்வேத்தியம் செய்தல் வேண்டும்.

**பணிநிலை 5 :- ஆலய சுவாமிகளுக்குப் பூமாலை கட்டுதல் சுவாமிகள் அலங்காரம் செய்தல் ( Making Garlands &Decoration - Hindu religious - worker Non - pastoral role)**
**தகைமைகள் :-** ஆலய பூமாலை கட்டுனராகவும் சுவாமிகள் அலங்காரம் செய்தவராகவும் 5 வருடங்களுக்குக் குறையாமல் பணியாற்றி இருத்தல் வேண்டும்.
**கடமைகள் :-** ஆலய பூமாலை கட்டுதல் சுவாமிகள் அலங்காரம் செய்தல்.


**வேதனம் :-** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளைக் கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்யப்படும்.
**விண்ணப்பமுடிவு திகதி :- 18.04.2023 (18 April 2023)**

(CS/23902)4,6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 03 . 1948



இறப்பு 16 . 03 . 2023

## கணபதிப்பிள்ளை நவரட்ணம்

பத்தர் கேணியடி காரைநகரை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நவரட்ணம் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்) அவர்கள் கடந்த (16.03.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தையல்முத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், தர்சிகாவின் அன்புத் தந்தையும், வேணுகானனின் மாமனாரும், பொன்மலர், உமாதேவி, ஜெயமணிதேவி, சந்திரா தேவி, காலஞ்சென்ற வெற்றிநாதன், காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, ஜெயராஜா மற்றும் நவநீதகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குலராசா, காலஞ்சென்ற ஜெகதீசன் மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் (பத்தர் கேணியடி, காரைநகர்) இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கன்று இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பத்தர் கேணியடி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

**தொடர்புக்கு : 077 6418 461, 077 361 8568**

(CS 23935) 1/6

# கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் இந்துவின் முன்னாள் உப அதிபரும் பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினாருமான
**திருமதி கமலவேனி விஜயகுமார்**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி திருநாவுக்கரசு யோகேஸ்வரி



தோற்றம் 23.05.1927 | மறைவு 14.03.2023

அம்மையார் அமரத்துவம் அடைந்த தையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவிப் பதோடு அன்னாரின் ஆத்மா அம்பாள் அடியில் என்றென்றும் இன்புற்றிருக்க பிரார்த்திக்கின்றோம்.

**உரும்பிராய் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
உரும்பிராய் கனடா - லண்டன்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**2022 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 29 ஆம் நாள்
ஜீவப்பிரம்ம ஐக்கியப்பேறு பெற்ற எமது குடும்பத்தின்
ஆன்மீக ஒளிவிளக்கு
காங்கேய வாகீசர் கலாபூஷணம்**

## சிவத்திரு. வல்லிபுரம் குமாரசாமி ஐயா

**(ஓய்வுபெற்ற நூலகப் பொறுப்பாளர்)**

ஞான உதயம் 23 . 03 . 1945



பிரம்ம ஐக்கியம் 29 . 03 . 2022

**திதி:- 19.03.2023**

ஞான விளக்காய் நல்லொளி வீசி
நம்மையெல்லாம் நல்லாளாக்கி
நல்லறிவூட்டி தந்தையாய் தாயாய்
தமையனாய் நல்லாசானாய்
குருவாய் எமக்கு வாய்த்து
குவலயம் தன்னில் எம்மை
குணமுடையவராய் வாழவைத்த
எங்கள் குலதெய்வமே

நெற்றியில் நிறைந்த நீற்றுடன்
இசையுடன் பாவம் ஓங்கும்
இனிய சொற்பொழிவாற்றி எமது
சமய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டதும்
அடியவர்கள் புடைசூழ பல
குருமார்கள் பதம் நாடி
ஆன்மீக வாழ்விற்கு எமக்கு வித்திட்டதும்

ஆலயங்களுக்காய் அயராது உழைத்து
அன்போடு வரும் அடியவர்களுக்கு
அன்னமளித்து
அரிய நூல்கள் பல எழுதி அதனை
அன்போடு எமக்களித்ததும்

பட்டங்கள் பலபெற்றும் பாமரன் போல்
பழகும் உங்கள் பணிவான பாங்கும்
பரம்பொருளே பெரும் பொருளென
பரம பதம் நாடிய உங்கள் பணியையும்
மறக்க முடியாமல் பரிதவிக்கின்றோம்
பாசமுடன் உங்கள் உறவுகள்

பரப்பிரம்மத்துடன் ஐக்கியமாகிய உங்கள் ஆத்மா சிவாத்மாவாக சாந்திபெற வேண்டுமென எல்லாம் வல்ல சந்நிதி வேற் பெருமானையும், ஏழாலை களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாளையும் வல்ல குருநாதனையும் பணிந்து இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"ஆனந்தபவனம்"
சூராவத்தை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 03 . 02 . 1958



ஆண்டவன் அடியில் 17 . 02 . 2023

அமரர் பேராசிரியர்

## இரத்தினம் விக்கினேஸ்வரன்

அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும், பதாகைகள், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சைவப் பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

(CS 23948) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் திருமதி
# நவமணி வாதவூரர்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - க/பெத்தேகம பாடசாலை, க/ கோம்பறை பாடசாலை, க/ தொலஸ்பாகை பட்டித்தலாவ சிங்கள / தமிழ் வித்தியாலயம், யா/ அளவெட்டி சதானந்த வித்தியாலயம், கிளி / திருவையாறு ம.வி, யா/ அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயம்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10.08.1928 | 26.03.2023 |

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் (26.03.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் K.K.S. **வீதியிலமைந்-துள்ள ஸ்ரீ காமாட்சி அம்மன் (நாச்சிமார் கோவில்) திருமண மண்டபத்தில்** நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடை-பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

மேலும் எமது தாயாரின் மறைவுச் செய்தியை அறிந்தவுடன் எமது துயரில் நேரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனுதாபத்தை தொலைபேசி, தொலைநகல் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி செய்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**வா. தயாபரன்**
(ஓய்வுநிலை பண்ணை முகாமையாளரும், போதனாசிரியரும் - மில்கோ நிறுவனம்).
**077 691 5296**
**இல. 1314, K.K.S.வீதி, கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

# பொன்னையா கந்தையா

**(முன்னாள் முகாமையாளர் நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**



நீர்வேலி தெற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தையா அவர்கள் கடந்த (15.03.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நாகராசா, வள்ளியம்மை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கணபதிப்பிள்ளை (கனடா), இளையபிள்ளை ஆகியோரின் மைத்துனரும், புனிதவதி (ஜேர்மனி), அனுசலாதேவி (ஜேர்மனி), கௌசலாதேவி (சுவிஸ்), சித்ரா (ஜேர்மனி), கோமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோமசேகரம் (ஜேர்மனி), காலஞ்சென்ற மகேந்திரராஜா மற்றும் பாலசிங்கம் (சுவிஸ்), தவராசா (ஜேர்மனி), ரமணிதரன் ஆகியோரின் மாமனாரும், ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட ஜெயராம், ராதிகா, சசீந்திரன், சிந்துஜா, நிசாந், சௌமி, தனுகா, கவிதா, லக்சியா மற்றும் காலஞ்சென்ற நிதர்சன் (சுவிஸ்) மற்றும் மிதுனாளினி, ஹரிலக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜேர்மனை வசிப்பிடமாகக் கொண்ட திரிவேஷ், ரதீஸ், ரதீஷா, ரக்ஷிகா, அபினேஷ், அபிஷா, இஷானா, விஷ்ணு, சுபைதா, ராஜா, ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**கரந்தன் வீதி,**
**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 309 9122, 077 757 0141**

(CS 23943) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண மக்களுக்கு ஓர் நற்செய்தி

ஐரோப்பிய நாடுகளுக்கான விசிட் விசா
ஒரு மாத காலத்தில் ஒழுங்குபடுத்தி தரும்
நிறுவனமான

## GRINNALL COLLEGE

இந்த வார விசா பெறுனர்களாக ...





லண்டன், கனடா, அவுஸ்ரேலியா, நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கான மாணவர் விசா 100% உத்தரவாத்துடன் முற்கட்டணம் ஏதுமற்ற Sponsor கட்டணங்களற்ற சேவையினையும் வழங்கி வருகிறார்கள்.

**நேர்த்தியானதும் நம்பகரமானதும் சேவையினை பெற்று கொள்ளுங்கள்**

**Contact Us**
... and become one of them

GRINNALL COLLEGE

5th Floor, 347 R.A. De Mel Mawatha, Kollupitiya, Colombo.
+ 94 74 257 4685
info@grinnallcollege.com






**உங்கள் இறக்குமதி/ஏற்றுமதிகளை**
**இந்திய ரூபாயில் இலகுவாக முன்னெடுக்க செலான் வங்கிக்கு வாருங்கள்.**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள், இளங்கோ 0112 456 428
அல்லது அருகிலுள்ள செலான் வங்கிக் கிளையை அணுகுங்கள்.

செலான் வங்கி



JANATHA

# உங்கள் நிர்மாணங்களை வலுவாக்கும் எமது மேன்மையான தயாரிப்பு

## JANATHA G.I.TUBE

மக்கள் நம்பிக்கையின் உண்மையான வலு






கடந்த 37வருடங்களாக இந்நாட்டில் நிர்மாணத்துறை மற்றும் கைத்தொழில் துறைக்குத்தேவையான இரும்பு உற்பத்திகளை இறக்குமதி செய்து விநியோகம் செய்துவரும் மக்களின் நம்பிக்கைக்கு பெயர் பெற்ற JANATHA STEELS நிறுவனம் செயற்திறனுடன் கூடிய, நியாயமான விலைகளில் GI BOX BAR, GI ROUND TUBE, GI LIP CHANNEL ஆகிய பொருட்களை உற்பத்தி செய்து நாடுமுழுவதும் வழங்குவதற்காக "JANATHA GI TUBE" எனும் நாமத்தில் உள்நாட்டு உற்பத்திகளை ஆரம்பித்துள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து 5 நிமிட நடை தூரத்தில் 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
பார்வையிடும் நேரம் : சனி, ஞாயிறு
முற்பகல் 10.00 - மாலை 6.00 மணிவரை
074 276 5651
WhatsApp :- +1416 893 2377



## Centre For Holistic Healing
நிறைவாழ்வு மையம்
Diploma in Psychological Counseling (6th Batch)

பாடசாலைகளில் கற்பிக்கும் உளவள ஆசிரியர்களுக்கான (Counseling Teachers) ஒருவருட பயிற்சிநெறி இறுதிவார நாட்களில் மு.ப. 9-12 மணிவரை நிறைவாழ்வு மையத்தினரால் "Jaffna College Undergraduate Department, 464, Hospital Road, Jaffna"
இல் அமைந்த ஆற்றுப்படுத்தல் நிலையத்தில் நடைபெறுகிறது. பயிற்சி இறுதியில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் 23.03.2023 (வியாழக்கிழமை) வரை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகட்கு :-
0777 3704 94, 077 917 7230



## காணி விற்பனைக்குண்டு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள பிரதான காணி விற்பனைக்குள்ளது. யாழ். ரயில் நிலையத்திலிருந்து இரண்டு நிமிட நடை தூரம். மற்றும் நகர மையத்திலிருந்து 10 நிமிட நடை தூரம். நிலத்தின் பரப்பளவு 7 லார்ச்சம்கள் மற்றும் 6 பேச்சர்கள் (76 பேர்ச்கள்) ஹோட்டல் அல்லது வீட்டு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஏற்றதாக உள்ளது. (தயவு செய்து தரகர்கள் தேவையில்லை)
077 003 2657
(CS 23801)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 08 . 01 . 1940



மறைவு 18 . 02 . 2023

### திருமதி பொன்னுச்சாமி விமலாதேவி

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து வருகை தந்து மற்றும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் கூறி எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார். உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இல. 72. வேம்படி வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 72, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்
(CS 23930) (3/6)

## மாணவர் சீருடைத் துணிகள் அடுத்த வாரம் வழங்கப்படும்

சாவகச்சேரி, மார்ச் 19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாண வர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர்களி டம் கையளிக்கப்பட்டன.

அதற்கமைய 2022 ஆம் கல்வி ஆண்டின் மூன்றாம் தவணை நிறைவுறும் நிலையில் மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)


### ஆண் வேலையாட்கள் தேவை
மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு வேலையாள் தேவை.
வயதெல்லை (18-22)
074 310 9487
(CS 24073)(5/6)

### பெண் வேலையாட்கள் தேவை
பான்சி கடைக்கு பெண் வேலையாட்கள் தேவை.
077 162 9514
(CS 24074)(5/6)

### வகுப்புக்கள்[கணிதம்,ஆங்கிலம்]
பாடசாலை மாணவர்களுக்கும் ஆங்கிலம் அடிப்படையில் இருந்து கற்க ஆர்வமுடையவர்களுக்கும் வீடு வந்து கற்பிக்கப்படும்.
076 112 4145
(CS 24077)(5/6)

### வாடகைக்கு
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கட்டடம் வாடகைக்கு உண்டு. கடைகள் / அலுவலகங்களுக்கு ஏற்றது.
077 162 0626

### மெக்கானிக் தேவை
டீசல் வாகனங்களின் பம், நொசல் கழட்டிப் பூட்டக்கூடிய அத்துடன் திருத்துவதில் ஆர்வமுடைய வயது 20-35 இடைப்பட்ட ஆண் வேலையாள் தேவை.
077 253 0865 (CS 24064)(5/6)

### வேலையாட்கள் தேவை
✔ யாழ்ப்பாணம் - கொழும்பு
✔ பருத்தித்துறை - கொழும்பு
சொகுசு பஸ் சேவையில் ஈடுபடும் நிறுவனத்திற்கு பஸ் நடத்துனர்கள் உடன் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(CR 39476)(5/6)
076 009 4946

### HOTEL VACANCIES IN NALLUR
We are looking for dynamic & equally committed individuals to join with us for the following capacities to meet the growth plans of our Newly opened Hotel
✔ Resseptinasit (Male & Female)
✔ Room Boy Cum Steward
✔ Cook
Please Apply With Your Complete CV And Contact Details Of Two Non Related Referees
jamunavillalk@gmail.com

### இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்
பிரிவு 46
- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

IELTS வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஆசிரியர் - சண் மாஸ்டர்
ஆரம்பம் : 25, 26-03-2023, காலை 10.00மணி
காலம் : 03 மாதங்கள் சான்றிதழ் பிரிவுகள்
IPS to your future
திருநெல்வேலி.
T.P:- 021 243 0229
076 685 2529

### காணி விற்பனைக்கு
கோண்டாவில் சந்தியிலிருந்து 200m தூரத்தில் உள்ள உடற்பயிற்சி நிலையத்துக்குப் பின்னாலுள்ள 1 1/2 பரப்புள்ள இரு காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (உரிமையாளர்)
076 117 7847, 077 020 1366, 075 214 4404


## (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர் களால் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். போது மான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தா பம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தை களில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனம்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர் களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** ஆதாயம் கிடைக்கும். காரி யங்கள் அனுகூலமாக முடியும். உறவி னரி டம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாள். உறவு களால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும். முக்கிய மான முடிவு ஒன்று எடுப்பீர்கள்.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். ஆதா யம் உண்டாகும். செலவு செய்ய நேரிடும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படு வீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டா கும். கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவு களும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப் பார்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவர வுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த லாபம் கிடைப்ப தில் பிரச்சினை எதுவும் இல்லை. மகாவிஷ்ணுவை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்..

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக் கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். நீங்கள் கேட்டதை மறுப் பின்றி வாங்கித் தருவார்.

## மானிப்பாய் வாள்வெட்டு: 5 சந்தேகநபர்கள் கைது

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மையில் வாள்வெட்டுத் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், நவாலி சுடலைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வாள்கள் நேற்று மீட்கப்பட்டன. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அடுத்தகட்ட விசாரணைகளில் வாளைத் தயாரித்த கம்மாலை உரிமையாளர் ஒருவர் (வயது -38) கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்தும் ஒரு வாள் மீட்கப்பட்டது. கம்மாலை உரிமையாளரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், வாள் தயாரிப்பதற்காக அவருக்கு உதவிசெய்த மேலும் ஒருவரும், வாள்வெட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டர்சைக்கிளை உதிரிப்பாகமாக்கி வேறுவேறு பகுதிகளில் மறைத்துவைத்த நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுக்கு...

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 2.9 மில்லியன் மக்களுக்கு உதவும் நோக்கில் மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் மனிதாபிமானத் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் செயற்றிட்டத்தின் ஊடாக இதுவரையில் 98.1 மில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பெருமளவான மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகியுள்ளது. நாளாந்தக் கூலித் தொழில்வாய்ப்புக்களில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியினால் பெருந்தொகையானோர் தமது வருமானத்தை இழந்திருக்கின்ற போதிலும், அன்றாட வாழ்க்கைச்செலவு தொடர்ந்து அதிகரித்துச்செல்கின்றது.

இது சமூகத்தின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் அதேவேளை, பொதுமக்கள் தமது அன்றாட உணவுத்தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்குப் பல்வேறு மாற்றுவழிகளைக் கையாளவேண்டிய நிலைக்குத் த்தள்ளப்பட்டுள்ளனர். அதேபோன்று கல்வி மற்றும் மருந்துப்பொருள்கள் உள்ளிட்ட சுகாதாரசேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சவால்கள் இன்னமும் தொடர்கின்றன - என்றுள்ளது. (அ-ம)

## ஐ.எம்.எப்...

உடன்பாடுகள் தொடர்பான அறிக்கை, நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு எதிர்வரும் 20ஆம் திகதி கூடவுள்ளது. இதன்போது இலங்கைக்கு கடன் வழங்குவதற்கான நிறைவேற்றுக் குழுவின் அனுமதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் குழுவின் இணக்கப்பாடு கிடைத்த கையோடு, ஜனாதிபதி ரணிலின் அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். இதில் ஒளிவு மறைவுக்கு இடமில்லை. அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பின்னர், அது தொடர்பிலும் மாற்றுத் திட்டங்களை எதிரணிகள் முன்வைக்கலாம் - என்றார். (அ-ம-44)

## 40 அரச...

எந்தவொரு அரச ஊழியர்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது - என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைத்த பின்னர் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள பொருளாதார ஏற்பாடுகள் என்ன என்பது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும்போதே இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான பணிப்பாளர் சபை அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், இந்த மாதத்துக்குள் 330 மில்லியன் டொலர் கிடைக்கப்பெறவுள்ளது. இந்த வருடத்தின் நான்காவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் பலப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இலங்கைக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியை வழங்குவது குறித்த பணிப்பாளர் மட்ட கலந்துரையாடல் நாளைமறுதினம் (நாளை) திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது எடுக்கப்படவுள்ள தீர்மானம் குறித்து இலங்கை நேரப்படி செவ்வாய்க்கிழமை காலை விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் ஊடாக அறிவிக்கப்படவுள்ளது. அத்தோடு நாணய நிதியத்தின் ஒத்துழைப்பானது 2.9 பில்லியன் டொலருடன் நின்றுவிடப் போவதில்லை.

அனுமதி கிடைக்கப் பெற்றதன் அடுத்த கட்டமாக முதலில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்புக்களை ஆரம்பிப்பதாகும். தற்போது சுமார் 40 அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை இடை நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், இவ்வாறான மறுசீரமைப்புக்களின் போது எந்தவொரு அரச ஊழியர்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது - என்றார். (அ-ம)

## மஹிந்தவின்...

பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் நீண்ட காலமாக அரசியலிலிருந்து விலகியிருந்தேன். கொள்ளையர்களுடன் அரசியலில் ஈடுபடமுடியாது என்பதால் 2005ஆம் ஆண்டிலிருந்தே நான் விலகியிருந்தேன். 2015இல் எனது மீள் வருகையுடன் அனைவரும் இணைந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம். எவரும் எதிர்பாராத பல மாற்றங்கள் இடம்பெற்றன.

எனினும் அதன் பின்னர் 4 ஆண்டுகள் நான் அரசியலிலிருந்து விலகியிருந்தேன். தற்போது என்னை மீண்டும் களத்துக்கு அழைத்திருக்கின்றனர். ஆனால், இம்முறை மாற்றமொன்று இடம்பெறுமா என்பது எனக்குத் தெரியாது. ஆயினும் நான் சற்று ஒதுங்கியிருந்து சில நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றேன்.

இலங்கை தோல்வியடைந்த ஒரு நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் கொள்ளையர்களாகின்றனர். இது எவ்வாறு இடம்பெறுகிறது? இதனை எவ்வாறு நிறுத்துவது? 1977களில் அரச சேவைகளில் காணப்பட்டவர்களில் 10 சதவீதமானவர்கள்கூட கொள்ளையர்களாகக் காணப்படவில்லை.

எனினும் 1977இன் பின்னர் படிப்படியாக அனைவரும் கொள்ளையர்களாக்கப்பட்டுள்ளனர். அதன் உச்சகட்டம் மஹிந்த ராஜபக்ச ஆட்சியிலேயே இடம்பெற்றது. அவரது ஆட்சிக் காலத்தில், முடிந்தவரை கொள்ளையிடுங்கள். ஆனால், அவை வெளிவராமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

அனைவரும் கொள்கை ரீதியில் கொள்ளையர்களாக்கப்பட்டனர். மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இரண்டாவது அமைச்சரவைக் கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அவரது ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் என அனைவரும் போட்டியிட்டு கொள்ளையடித்தனர். இதனை தற்போது சீர்செய்வது கடினமாகும். எனினும் எம்மால் அதனைச் செய்ய முடியும் - என்றார். (அ-ம)

## நாவற்குழி விகாரை...

நேற்றையதினம் கலசத் திரைநீக்கம் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இறுதிப் போரின்போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சவேந்திரசில்வாவின் பங்குபற்றலுடன் இந்தத் திரைநீக்கப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நாவற்குழி ரயில் நிலையத்திலிருந்து விகாரை வரையில் ஊர்வலம் இடம்பெற்று அதைத் தொடர்ந்து இந்தக் கலச திரைநீக்கம் இடம்பெற்றது. (அ-ம-125)

## நாவற்குழி...

விகாரை அமைந்துள்ள பகுதியில், விகாரையைத் திறந்துவைக்கும் சமநேரத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழர் தேசத்தில் விகாரைகள் எதற்கு?, இனப்படுகொலையாளி சவேந்திர சில்வாவே எம் மண்ணிலிருந்து வெளியேறு, நாவற்குழி விகாரை சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பின் அடையாளம், திட்டமிட்ட பௌத்த மயமாக்கலை நிறுத்து உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### போராட்டக் கோஷங்களுக்கு நிகராகப் பௌத்த கோஷம்

இவ்வாறு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கலச திரைநீக்கத்துக்காக வருகைதந்திருந்த பௌத்த துறவிகளும், இராணுவ அதிகாரிகளும், சிங்கள மக்களும் போராட்டக் கோஷத்துக்கு மேலாக பௌத்த சுலோகங்களை கோஷங்களாக எழுப்பினார்கள். இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவானதை அவதானிக்க முடிந்தது. (அ-ம-125)

## அராலியில்...

இறப்புச் சம்பவித்துள்ளது. பட்டா வாகனத்தைச் செலுத்திய சாரதியே விபத்தில் உயிரிழந்தவராவார். பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகிய இருவரும் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-9,125,20)

## நெடுந்தீவில்...

வெடியரசன் கோட்டை 2007ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் தொல்பொருள் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அருகில் சுமார் 50 மீற்றர் தூரத்தில் பௌத்த ஸ்தானத்தின் எச்சங்கள் மூன்று இடங்களில் காணப்படுகின்றன. அவை 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமே வர்த்தமானியில் தொல்பொருள் சின்னமாக அடையாளப் படுத்தப்பட்டன.

இந்த நிலையில் திடீரென கடற்படையினரால், வெடியரசன் கோட்டைக்கு அருகிலுள்ள பௌத்த ஸ்தானத்துக்கு அண்மையாக தகவல் பதாகை, சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் வைக்கப்பட்டுள்ளது. 'சிங்கள பிராகிருத மொழி எழுத்து இங்கு உள்ளதாகவும், சிங்கள - பௌத்தத்துக்குரிய எச்சம் காணப்படுவதாகவும்' அந்தத் தகவல் பதாகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அது தவறானது என்றும் வரலாற்றை திரிபுபடுத்துவதாகவும், முன்னாள் வரலாற்றுத் துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் சுட்டிக்காட்டுகின்றார்.

'அங்கு காணப்படுபவை 14 - 15ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள். சில தமிழ்ச் சொற்களை எழுதுவதற்கு கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். கல்வெட்டுமூலாதாரத்திலிருந்து அங்கு எழுப்பப்பட்ட பௌத்த ஸ்தானம் தமிழருக்குரியது என்பது தெரியவருகின்றது' என்று புஸ்பரட்ணம் தெரிவிக்கின்றார்.

இதேவேளை- அங்கு வைக்கப்பட்ட தகவல் பதாகையை தொல்பொருள் திணைக்களமே நட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை தொல்லியல் திணைக்களம் முற்றாக மறுத்துள்ளது. அதேவேளை, நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை என்பனவும் அதனைத் தாம் வைக்கவில்லை என்பதை மறுத்துள்ளன.

இதற்கிடையில் இலங்கைக் கடற்படையினர், தாம் நட்டுள்ள அந்தத் தகவல் பலகையை அகற்றவேண்டாம் என்று நெடுந்தீவு பிரதேசசபையிடம் கோரியுள்ளதாக தவிசாளர் நல்லதம்பி சசிக்குமார் தெரிவித்துள்ளார். முறையான அனுமதிக்கு விண்ணப்பிக்கும்போது, தகவல் பலகையிலுள்ள விடயங்கள் சரியானவையா என்று தொல்பொருள் திணைக்களத்திடம் உறுதிப்படுத்திய பின்னரே காட்சிப்படுத்த அனுமதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை- கடற்படையின் பேச்சாளர் இணைய ஊடகம் ஒன்றுக்கு, இலங்கை அரசாங்கத்தால் புராதன முக்கியத்துவம் வாய்ந்த இடமாக வர்த்தமானி அறிவித்தலில் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் வெடியரசன் கோட்டையில், எந்தவொரு சட்டவிரோதமான நடவடிக்கைகளையும் கடற்படையால் முன்னெடுக்க முடியாது. வெடியரசன் கோட்டையில் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த அறிவித்தல் பலகை சில தரப்பினரால் அகற்றப்பட்டுள்ளது. அதனை யார் செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. யாழ்ப்பாணத்தில், தொல்பொருளியல் திணைக்களத்தின் அலுவலகங்கள் ஏதும் இல்லாத காரணத்தால் அறிவித்தல் பலகையை மீண்டும் அதே இடத்தில் வைக்குமாறு எமக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்கேற்ப அறிவித்தல் பலகை வைக்கப்பட்டது. தற்போது சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் வைக்கப்பட்டிருக்கும் இந்த அறிவித்தல் பலகைகளை தமிழ் மொழியிலும் வைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ,5,125)

## பாடசாலைகளுக்கு...

முதலாம் தவணையின் இரண்டாம்கட்ட விடுமுறை 2022ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக எதிர்வரும் மே மாதம் 13ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 24ஆம் திகதிவரை விடுமுறையளிக்கப் படவுள்ளது. மூன்றாம் கட்ட விடுமுறை ஜூலை மாதம் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை வழங்கப்படவுள்ளது. மேலும் இரண்டாம் தவணைக்கான விடுதலை ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதிமுதல் நவம்பர் 12ஆம் திகதிவரை வழங்கப்படவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 2023 ஆம் கல்வி ஆண்டுக்கான 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையும், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையும் இடம்பெறவுள்ளன.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட விடுமுறை டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் 2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிவரை வழங்கப்படவுள்ளது என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடல் ஆமையுடன் கைதான நபருக்கு ரூ.30,000 அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

வேலணைப் பகுதியில் கடல் ஆமையுடன் கைதான நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. வேலணை - சாட்டிப் பகுதியில் கடல் ஆமை ஒன்றை இறைச்சிக்காக் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து கடல் அமையும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அதன்பின்னர் அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் ஊர்காவற்றுறைப் பொலிஸால் மீட்கப்பட்ட கடல் ஆமையை வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவியுடன் கடலில் விடுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-14,23)

## திங்கட்கிழமை முதல் தவணைப் பரீட்சைகள்

கடந்த 15 ஆம் திகதி நடைபெறவிருந்த தவணைப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை முதல் நடைபெறும் என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த 15 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட ஆசிரியர்கள், அதிபர்களின் பணிப்புறக்கணிப்பால் பரீட்சைகள் நடைபெறவில்லை என்பதால் தவணைப் பரீட்சைகள் பிற்போடப்பட்டன. இதன்பிரகாரம் நாளை திங்கட்கிழமை தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தரம் 10, 11 வகுப்பு மாணவர்களுக்கும் பரீட்சை நடத்துமாறு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

## பொதுக்கூட்டம்

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இவ்வித்தியாசாலையின் அனைத்து பழைய மாணவர்கள்ளயும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் அறிவித்துள்ளது. (ஒ-14,66)

### தேவை

கிளிநொச்சியில் உள்ள பிரபல புடைவை வியாபார நிலையத்துக்கு காசாளர், முகாமையாளர் ஆகியோர் தேவை.

077 452 3408, 077 351 5980

### பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் வைத்தியர் ஒருவரின் வீட்டில் இரவு, பகல் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்.

077 724 2362

### Personal Classes

English Grade - 6 - 11

வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.

Ananth (BA) 077 911 5962

### வாடகைக்கு

பூட்சிற்றி, ஹாட்வெயர் அமைக்கப் பொருத்தமான இரண்டு பிரதான வீதிகளை முகப்பாகக் கொண்ட சாந்தைச் சந்தி. தெல்லிப்பளையில் 1000 சதுர அடி கொண்ட கடைத்தொகுதி வாடகைக்குண்டு.

077 572 3474

### 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி பொன்னையா

திதி:- 19 பங்குனி



23 ஆண்டுகள் அல்ல
100 ஆண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகளை
மறவோம்.

மகன் குடும்பத்தினர்.
பரமசாமி

(CS/23898)4,6

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.
K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.
தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.

தொடர்பு:- 076 7558 606/076 4365 814

(CS 23932)1-6

### வாடகைக்கு
### Office Space for Rent

1st House - Four rooms, bathroom, toilet, hall, conference Hall
2nd House - Two rooms, bathroom, hall, kitchen
Mullaitivu - Paranthan road, Selvapuram, Mullaitivu இல் அமைந்துள்ள இந்த இரு வீடுகளும் ஒன்றாக வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள், அலுவலகங்கள் போன்றவைக்கு மட்டும். (Office use only)

Call - Priya - 077 951 0436
Judsini - 076 943 6590

### தொடர்பு கொள்ளவும்

மானிப்பாய். சுன்னாகத்தைச் சேர்ந்த **தம்பிமுத்து நாகரத்தினம்** என்பவரை அவரது நண்பர்கள் **நவம் நவரத்தினம், விசயன் துரைராசா** ஆகியோர் நீண்ட காலமாக நண்பர்களின் தொடர்புகள் இல்லாத காரணத்தினால் தேடுகின்றார்கள்.

076 963 4997 / 076 673 8031 (உள்ளூர்)
+171 856 49924/ +39 328 178 3625

### நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்கள் மற்றும் புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுப்பதற்கு உலக தரம்-வாய்ந்த இரசாயனப் பொருட்களைக் கொண்டு 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்து தருவோம். (நிறுவனத்தின் உத்தரவாதத்தை ஆராய்ந்து பார்க்கவும்)
1 சதுர அடி 130 ரூபாவிலிருந்து

**போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.**

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

(CS 23846)(3/6)

### தமிழ்ப்பாட வகுப்புகள்

யாழ் நகரில் அனுபவம் மிக்க பெண் ஆசிரியரால் தரம் 6,7,8,9,10, க.பொ.த சாதாரண, க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு (விருப்பத் தெரிவுப் பாடம் உட்பட) தனியாகவும், குழுவாகவும் தமிழ்ப் பாடம் கற்பிக்கப்படுகின்றது. ஆங்கிலமொழி மூலம் கற்போர் மற்றும் குறைந்த புள்ளிகள் பெறுவோரில் விசேட கவனம் செலுத்தப்படும்.

077 532 7636

(CS 23811)4,6

### பணிப்பெண் தேவை

வயோதிப மாதுவைப் பராமரிப்பதற்கு வீட்டிலிருந்து தங்கிப் பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.

077 069 8105

### மணமகள் தேவை

1990 பிறந்த 4இல் செவ்வாய் உடைய (அனுஷம்) சைவ போசன இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை.

077 882 1327, 076 863 3282

### மணமகன் தேவை

வயது-34, கல்வி-பல் வைத்தியர் (இந்தியா), வசிப்பிடம் - திருகோணமலை, நட்சத்திரம் - உத்தரம் 1ஆம் பாதம் உடைய பெண்ணுக்கு வெளிநாடு விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 818 2264

### காணி விற்பனைக்கு

நிருவத்தம்பை ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் (வேலகாடு சந்தி) நிலப்பரப்பு 4 குளி 00.42 பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட தனி வெட்டுக் கிணற்று நீர்ப்பாசன வசதியுடன் உள்ள காணி விற்பனைக்குண்டு.

077 572 3474, 076 424 4031

(CS/23971)4,6

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி விமான நிலையம், K.K.S. துறைமுகம் என்பவற்றுக்கு 1500m தூரத்தில் 8,10,12 பரப்புக் காணிகள் விற்பனைக்குண்டு.

075 521 3533

### வீடு வாடகைக்கு

வள்ாகவீதி, திருநெல்வேலி தெற்கில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு 2 அறை மற்றும் சமையலறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

077 604 7749
077 423 7536

### காணி விற்பனைக்கு

கல்வியங்காடு Point Pedroவீதியிலிருந்து 200m தூரத்தில் 3ம்கட்டை லேனில் 4 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 601 1135 (CS/23944)4,6

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம்(V) சேர்ந்த 1976ம் பிறந்த விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு பெற்றோர் அழகிய படித்த உள்நாடு/ வெளிநாட்டு மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகன் அவுஸ்ரேலியாவில் பொறியியலாளராகப் பணிபுரிகிறார்.

தொடர்பு:
077 265 9883 (CS 24058)(5/6)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1977ம் ஆண்டு பிறந்த மணமகனிற்கு(V) தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்

தொடர்பு:
075 037 5429 (CS 224060)(5/6)

### வேலையாட்கள் தேவை

✔சமையலாளர்:-(வயதெல்லை:20-45) ஆண்
✔காசாளர்:-(வயதெல்லை:18-30) பெண்

077 800 8224 (CS 24061)(5/6)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 43 வயது எழுத்து எழுதி தடைப்பட்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:
077 905 8615
(வைபர்& வாட்ஸ்ஆப்) (CS 24062)(5/6)

### காணி விற்பனைக்கு

கோப்பாய் இராச வீதிக்கு அண்மையில் 20 பரப்புக் காணி சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். (CS 24071)(5/6)

077 193 3490

### தேவை

கணினி அறிவுள்ள கணக்கியல் துறை சார்ந்தவர்கள் தேவை.

077 772 2215 (CS 24072)(5/6)

### வேலையாட்கள் தேவை

தச்சு தொழில் மற்றும் மேசன் வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்பு:
077 772 2265 (CS 24073)(5/6)

### NALIN EXCLUSIVE

NALIN Information Technologies (Pvt) Ltd

உங்களின் அனைத்துவிதமான கணினி தேவைகளுக்கும்...

- Install Windows OS for Macbook
- Apple Mac Software Solution
- Laptop Motherboard Chip Level Repair
- Laptop Repair
- Desktop Repair
- USP Repair & Battery Replacement
- Printer Repair
- Camera Installation & Repair

உங்கள் வீடுகளுக்கும் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

076 359 4359 / 021 221 0404
No.51 Stanly Road, Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2023.இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கங்கைக்கு எதற்கு புனிதம் சேர்க்கவேண்டும்?
தாய்க்கு எதற்கு அன்பை ஊட்டவேண்டும்?
தமிழுக்கு எதற்கு இனிமை சேர்க்க வேண்டும்?
வள்ளுவருக்கு ஏன் பெருமை சேர்க்கவேண்டும்?

கொரோனானந்த சுவாமிகள்


சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ... 28 ... ஞாயிற்றுக்கிழமை (19.03.2023) சிகரம் : 140




# ஆனையிறவில் ஆடும் சிவன்

நிலாந்தன்

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே, கண்டி வீதியில் தட்டுவன்கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை நிறுவப்பட்டிருக்கிறது. கரைச்சிப்பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில், புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு 27 அடி உயரமான அந்தச் சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத்தீவில் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை அதுவென்று கூறலாம்.

2009 க்குப் பின் ஆனையிறவுப் பிரதேசம் போர் வெற்றிவாதத்தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் பண்பாட்டுத் தலைநகரமாகிய கவர்ச்சிமிகு யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் எவரும் முதலில் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு போர் வெற்றி வளாகங்களைக் கடந்துதான் உள்ளேவர வேண்டும். அதாவது போர் வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள். இது எங்களால் வெற்றி கொள்ளப்பட்ட நிலம் என்றும் பொருள்.

யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் பொழுது குடாநாட்டின் கழுத்துப் பகுதியில் முதலில் தென்படுவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோல்வியுற்ற படை நடவடிக்கை ஒன்றின்போது பயன்படுத்தப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு கவச வாகனம். அதற்கருகில் அந்தக் கவச வாகனத்தை தடுத்து நிறுத்திய படை வீரர் ஒருவரின் நினைவுச் சின்னம். அதோடு சேர்த்து ஒரு விருந்தகம். அதைச் சற்றுத் தாண்டிச் சென்றால் வலது பக்கத்தில் கடலேரியின் பின்னணியில் பிரமாண்டமான ஒரு போர் வெற்றிச்சின்னம் உண்டு. இலங்கைத்தீவை இரண்டு கைகள் ஏந்தியிருப்பது போன்ற அந்த போர் வெற்றிச் சின்னம் தான் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் வெளியாள்களை வரவேற்கின்றது. அதாவது போர் வெற்றி உங்களை வரவேற்கிறது. இவ்வாறு கடலேரியின் உப்புக் காற்றில் எப்பொழுதும் போர் வெற்றி வாடை வீசும் ஒரு பிரதேசத்தில், தமிழ் மக்களின் வழிபாட்டுக்களில் ஒன்றாகிய நடராஜர் சிலையை நிறுவியமை என்பது அரசியல் அர்த்தத்தில் கவனிக்கப்படவேண்டியது.

அந்தச்சிலையின் அழகியல் அம்சங்களைக் குறித்தும் அது பார்த்த உடனேயே கையெடுத்துக் கும்பிடக்கூடிய ஒரு சிலையாக இருக்கிறதா? இல்லையா? என்பதைக் குறித்தும் பின்னர் தனியாக ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறேன். இன்று இந்தக் கட்டுரையில் நான் கூறவருவது அச் சிலைக்குப் பின்னால் இருக்கும் பிரதேச, பிராந்திய மற்றும் கட்சி அரசியலைப் பற்றி.

நாவற்குழிச் சந்தியை போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம். அரசாங்கம் அதைத் திட்டமிட்டு போர்வெற்றி வாசலாகக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறது. தமிழ்மக்கள் அதனை ஒரு மரபுரிமை வாசலாக மாற்றவேண்டும். அந்த அடிப்படையில் சிந்தித்து கரைச்சி பிரதேசசபை முடிவெடுத்திருந்திருந்தால் அது வரவேற்கத்தக்கதே.

நாவற்குழியில் ஒரு புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில், சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பது போல, ஆனையிறவிலும் போர்வெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு. ஆனால், அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமையவேண்டும்? அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமையவேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப்பல்வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமையவேண்டுமா?

சிவபூமி அறக்கட்டளை ஒரு சமய நிறுவனம். அதுதான் போற்றும் ஒரு சமயத்தை முன்னிறுத்தும். ஆனால், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள். அப்படிச் சிந்திக்கத் தேவையில்லை. மேலும் பொதுவெளிச் சிற்பம் வேறு. மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் வேறு. இரண்டையும் ஒன்றாகக் கண்டு மயங்கும் பொதுப்புத்தியை அரசியல்வாதிகள் இலகுவாகக் கையாள்வார்கள். பிரயோக தேசியவாதமும் நடைமுறையில் பொதுப்புத்தியின் மீதே கட்டியெழுப்பப்படுகிறது. ஆனால், தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்கவேண்டும் என்று மேற்கத்திய அறிஞர்கள் கூறுவார்கள். அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக் கட்டவேண்டும். இதை இன்னும் ஆழமாகச் சொன்னால், ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற அடிப்படையில் மக்களைத் திரட்டவேண்டும். இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு சமம்; ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துக்கு சமம்; யாரும் பிரதேச ரீதியாகவோ - சாதி ரீதியாகவோ - மத ரீதியாகவோ ஒருவர் மற்றவருக்கு மேலானவரும் அல்ல; கீழானவரும் அல்ல என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்டவேண்டும். எனவே தேசியவாதம் எனப்படுவது மதப்பல்வகைமையின் மீதே கட்டியெழுப்பப்படவேண்டும். மத மேலாண்மையின் மீது அல்ல. இந்த அடிப்படையில் சிந்தித்து தமிழ்மக்கள் தமது மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கவும் முன்நிறுத்தவும் வேண்டும்.

ஒவ்வொரு மதப்பிரிவும் அதனதன் மதச்சின்னங்களை முன்னிறுத்துவதில் தவறில்லை. அது அந்த மதத்தின் கூட்டுரிமை. ஆனால், ஒரு மதம் இன்னொரு மதத்தை அவமதிக்கும்போது அல்லது அந்த மதச் சின்னங்களை அழிக்கும்போது அல்லது ஒரு மதத்தின் மேலாண்மையை நிறுவ முற்படும் போதுதான் பிரச்சினை வருகிறது. அதாவது மதப் பல்வகைமை வேறு; மத மேலாண்மை வேறு.

அண்மைய ஆண்டுகளாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய மத்திய அரசை அணுகுவதற்கு மதத்தை ஒரு வாகனமாகப் பயன்படுத்த முயற்சிப்பது தெரிகிறது. இதில் சில தமிழ் அரசியல்வாதிகளும் அடங்குவர். இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் மதசார்பு நிலைப்பாட்டைப் பின்பற்றி அதன்மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை அணுக முடியுமா என்று மேற்படி தரப்புக்கள் சிந்திக்கின்றன. பாரதிய ஜனதா அரசாங்கமானது இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று. எனவே ஈழத் தமிழர்கள் அந்த அரசாங்கத்தைத் தான் அணுகவேண்டும். ஆனால், அதன் பொருள் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பாரதிய ஜனதா பின்பற்றும் அதே நிகழ்ச்சி நிரலை ஈழத் தமிழர்களும் பின்பற்றவேண்டும் என்றில்லை. இந்தப்பிராந்தியம் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துட் காணப்படுகிறது. இந்தியாவை மீறி எந்தவொரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தரமுடியாது. இந்தப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும்போது ஈழத் தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத்தான் அணுகவேண்டும். ஆனால், அதன் பொருள் தமிழ்த் தேசியத்தின் மதப்பல்வகைமையை பலியிடவேண்டும் என்பதல்ல.

ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் எனப்படுவது மதப்பல்வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. அதுபெருமளவு இந்துக்களைக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பாகிய யாழ்ப்பாண வாலிபர் முன்னணியை உருவாக்கியது (1924) ஒரு புரட்டஸ் தாந்து கிறிஸ்தவராகிய ஹன்டி பேரின்பநாயகம் தான்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது, அதன் கால்கோள் விழா 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றிலில் ஸ்ரீலஸ்ரீ துரைசாமிக் குருக்களின் ஆசியுடன் இடம் பெற்றது. இதுதொடர்பான தகவல்களை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் காணலாம். அந்தக்கட்சியின் தலைவராகிய செல்வநாயகம் ஒரு புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர். செல்வநாயகத்தை ஈழத்தமிழர்கள் தந்தை என்றும் ஈழத்துக் காந்தி என்றும் அழைத்தார்கள். தந்தை செல்வா இறந்தபோது அவருடைய உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை. இந்து முறைப்படி வேட்டி அணிவிக்கப்பட்டு, தகனம் செய்யப்பட்டது. தன்னைத் தலைவராகத் தெரிந்தெடுத்து, தந்தை என்று அழைத்த பெரும்பான்மை இந்து வாக்காளர்களை கௌரவிப்பதற்காக செல்வநாயகம் அவ்வாறு தன்னுடைய இறுதிக்கிரியைகளை இந்துமுறைப்படி செய்யுமாறு கேட்டுக் கொண்டார் என்றும் கருதப்படுகிறது.

எனவே ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகைமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது. அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்கக்கூடாது. குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுகநாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் 'இந்துபோர்ட்' போன்ற இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவுதான். ஆனால், அந்தப் போட்டியானது மத விரோதமாக, மோதலாக மாறவில்லை.

ஆனால், 2009க்குப் பின் எந்தவொரு மதத் தலைவரும் துணிந்து கதைக்காத ஒரு வெற்றிடத்தில், ஒற்றைக் குரலாக ஒலித்த, மன்னார் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களுடைய அதே மறை மாவட்டத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான முரண்பாடு தூக்கலாகத் தெரிவது தமிழ்த் தேசியத் திரட்சிக்குப் பாதகமானது. தமிழ்த் தேசியத்தை மதப்பல்வகைமையின் மீது கட்டியெழுப்ப விரும்பும் எல்லாச் சக்திகளும் அந்த முரண்பாட்டைத் தீர்க்க முயற்சிக்கவேண்டும்.

அவ்வாறு அகமுரண்பாடுகளைத் தீர்க்கும் சக்திமிக்க சிவில் அமைப்புகளோ கட்சிகளோ இல்லாத அரசியல் மற்றும் ஆன்மீக வெற்றிடத்தில், இன்னொருபுறம், சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் "எல்லைக் கற்களாக" புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருமோர் இராணுவ அரசியற் சூழலில், தமிழ் மக்கள் மத்தியிலும் இரவோடிரவாகச் சிலைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. இவ்வாறான சிலை அரசியலின் பின்னணியில், ஆனையிறவில் நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது. சிவ நடனத்துக்கு ஆன்மீக வியாக்கியானம் மட்டுமல்ல, பௌதிகவியல் வியாக்கியானமும் உண்டு. அது ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது (cosmic dance). ஆனையிறவுச் சிவனுக்கு மேலதிகமாக ஓர் அரசியல் பரிமாணமும் உண்டு. உப்புக் காற்றில் போர் வெற்றிச் சின்னங்களின் மத்தியில், சிவனார் யாருடைய பஜனைக்கு ஆடப்போகிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தான் - இலங்கை; போராட்டங்களின் பின்னணி!

அ.நிக்ஸன்

இலங்கைத்தீவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான போராட்டங்களும், பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் இம்ரான்கானைக் கைது செய்வதற்கு எதிரான போராட்டங்களும் தீவிரமடைந்து வருவதன் பின்னணியில் புவிசார் அரசியல் பொருளாதாரக் காரணிகளே செல்வாக்குச் செலுத்துகின்றன.

சீனச் சார்புடைய இம்ரான்கானைக் கைது செய்ய பாகிஸ்தான் பொலிஸார் திட்டமிட்டதால் எழுந்த போராட்டங்கள், வன்முறைகள் போன்றவற்றுக்கு மத்தியிலேதான் பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதுவர் டொனால்ட் புளோமி (Donald Blome) 4.5 மில்லியன் அமெரிக்க டொலரை அந்தநாட்டுக்கு வழங்கவுள்ளதாக அறிவித்திருக்கிறார். ஏனெனில் இம்ரான் கானின் அரசியல் செல்வாக்கு மீண்டும் அதிகரித்துள்ளது. ஆதரவுப் போராட்டங்களும் தீவிரமடைந்து வருகின்றன. இம்ரான்கானைக் கைது செய்ய பொலிஸார் அவருடைய இல்லத்தைச் சூழ்ந்திருந்தபோது, அதற்கு உயர் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால் பாகிஸ்தான் பொலிஸாரின் அடக்குமுறை நிறுத்தப்பட்டுள்ளதாக 'பாகிஸ்தான் ருடே' என்ற ஆங்கில நாளிதழ் புதன்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது. இம்ரான்கானுக்கு ஆதரவான போராட்டங்களின் பின்னால் சீனா நிற்பதாக பிரதமர் ஷெகிப்பாஷ் ஷெரீப் (Shehbaz Sharif) தலைமையிலான பாகிஸ்தான் லீக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை போராட்டக்காரர்கள் மறுத்திருக்கின்றனர்.

இலங்கையில் ரணில் அரசாங்கத்துக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களின் பின்னால் இடதுசாரிகள் இயங்குவது பகிரங்கம். ஆனால் எந்த வெளிச்சக்தி பின்னணியில் உள்ளது என்பதுதான் கேள்வி.

அமெரிக்காவில் தனது ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்கு ஜோ பைடனின் இடதுசாரிக் கட்சிதான் காரணம் என்று டொனால்ட் ட்ரம் அப்போது கூறியிருந்தார். அமெரிக்காவின் ஏனைய இடதுசாரி அமைப்புகள் மீதும் ட்ரம் குற்றம் சுமத்தியிருந்தார்.

ஆனால் ஜோ பைடனின் ஜனநாயகக் கட்சியை இடதுசாரித் தன்மை கொண்ட கட்சியாகப் பார்க்கமுடியாது. இருந்தாலும் தூய அமெரிக்கவாதத்தை டொனால்ட் ட்ரம் முன்வைப்பதால் ஜோ பைடனின் ஜனநாயகக் கட்சி அதற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து, அமெரிக்கப் பிரஜாவுரிமைபெற்றுள்ள குடியேற்றவாசிகளையும் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தியுள்ளது. ஆகவே இடதுசாரித் தன்மை வெளிப்பட்டாலும் ட்ரம்பின் அமெரிக்கத் தேசியவாதக் கொள்கையின் சாயலோடுதான் ஜோ பைடனின் ஜனநாயகக் கட்சியும் செயற்படுகின்றது என்பதே உண்மை.

இதன் பின்புலத்தில் ரணிலுக்கு எதிராக இடம்பெறும் போராட்டங்களுக்கு ஜோ பைடன் நிர்வாகம் அல்லது அமெரிக்கத் தேசியவாதத் தன்மை கொண்ட இடதுசாரி அமைப்புகள் ஆதரவு வழங்குகின்றனவா என்ற சந்தேகங்களை முற்றாக நிராகரிக்கமுடியாது. ஏனெனில் ஜே.வி.பி, சோசலிஷ முன்னிலைக் கட்சி உட்பட இலங்கைத்தீவில் உள்ள சிங்கள இடதுசாரிகள், பௌத்த தேசியவாதச் சிந்தனையோடு இயங்குவதை அமெரிக்க இடதுசாரிகள் நன்கு அறிந்திருப்பர்.

2022 ஏப்ரலில் தனது அரசாங்கம் அமெரிக்கச் சதியினால் கவிழ்க்கப்பட்டதாக இம்ரான்கான் வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியிருந்தார். இலங்கைத்தீவில் 2022 ஜுலை மாதம் கோத்தாபய ராஜபக்ச பதவி கவிழ்க்கப்பட்டதன் பின்னணியிலும் வெளிச்சக்திகள் இருந்ததாகக் கூறப்பட்டது. ஆனாலும் இம்ரான் கான் போன்று எந்த நாடு என்று பெயர் குறிப்பிட்டு கோத்தாபய குற்றம் சுமத்தவில்லை.

2015 இல் தனது ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னால் இருந்தது இந்தியாதான் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பகிரங்கமாகவே கூறியிருந்தார். அந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு அமெரிக்காவும் பின்னணி என்று மஹிந்தவுக்கு விசுவாசமான மூத்த அரசியல்வாதிகள் சிலரும் அன்று வெளிப்படுத்தியிருந்தனர்.

கோத்தா பதவி விலகிய பின்னர் 2022 ஜுலையில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில், மேற்குலகச் சார்புடையவர் என்ற கருத்து இருந்தது. ஆனால் அவரும் சீனச் சார்புடையவர் என்பதற்கான அரசியல் அணுகுமுறைதான் ரணிலிடம் அதிகமாக வெளிப்படுகின்றது. 2015 இல் பிரதமராக இருந்தபோது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருட குத்தகைக்குச் சீனாவுக்கு வழங்கியவரும் இந்த ரணில்தான்.

அமெரிக்க - சீன அரசுகளுடன் சமாந்தரமான உறவைப் பேண வேண்டும் என்று 2015 இல் ரணில் பிரதமராக இருந்தபோது பகிரங்கமாக இலங்கை நாடாளுமன்றத்தில் கூறியுமிருந்தார்.

இந்தியாவுடன் மாத்திரமல்ல அமெரிக்க - சீன அரசுகளுடனும் சமநிலையில் உறவைப் பேண வேண்டுமென்ற கருத்துக்களை, தற்போது புதுடில்லியில் இலங்கைக்கான தூதுவராகப் பதவி வகிக்கும் ரணிலின் நெருங்கிய நண்பரான மிலிந்த மொறகொட பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருந்தார். சில மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சாணக்கியன், சீனாவின் செயற்பாட்டைக் கண்டித்து உரையாற்றியபோது குறுக்கிட்ட சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, சீனாவை இலங்கை பகைக்கமுடியாது என்றார். சாணக்கியனுக்கு அவர் எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

எனவே இந்தியாவை விட அமெரிக்க - சீன வல்லரசுகள், சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தேவை என்பதும், அதற்கேற்ப ஆட்சி மாற்றங்களை இந்த இரு நாடுகளும் இலங்கை அரசியல் சூழலுக்கு ஏற்ப தமக்கு வசதியான தென்னிலங்கைச் சக்திகள் மூலம் ஏற்படுத்தி வருவதையும் அறிய முடிகின்றது. இதனடிப்படையில் தற்போது இலங்கைத்தீவில் நடைபெறும் ரணிலுக்கு எதிரான போராட்டங்களின் பின்னணியில் ஜே.வி.பி, முன்னிலை சோசலிஷக் கட்சி போன்ற இடதுசாரிகளைப் பயன்படுத்தும் வெளிச் சக்தி யார் என்பதை தற்போதைய கொழும்பு அரசியல் சூழலுக்கு ஏற்ப ஊகிக்க முடியும்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அறிக்கை வெளியிட்டிருந்தார். வழமையாக அமெரிக்க - இந்திய தூதுவர்களைத் திட்டித் தீர்க்கும் இந்த இடதுசாரிகள், இம்முறை தூதுவரின் அறிக்கைக்கு எதிர்க் கருத்துக்களேதும் வெளியிடவில்லை.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்பது போராட்டத்தில் ஈடுபடும் இடதுசாரிக் கட்சிகளின் பிரதான கோரிக்கைகளில் ஒன்று. ஆகவே பிரதான வலதுசாரி எதிர்க்கட்சிகள் பெரியளவிலான போராட்டங்களில் ஈடுபடாமல் இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மூலமாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் போராட்டங்களுக்கு ஆதரவை மாத்திரம் வழங்கிக் கொண்டு பார்வையாளராக இருப்பதன் பின்னணி குறித்தும் சந்தேகங்கள் எழாமலில்லை.

## அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் திட்டத்துக்கு இந்தியா அதிருப்தி

2022 ஏப்ரலில் கோத்தாவுக்கு எதிராகச் சோசலிஷ முன்னிலைக் கட்சி உள்ளிட்ட இடதுசாரிகள் மற்றும் சில பொது அமைப்புகள் போராட்டங்களை முன்னெடுத்தபோதும், வலதுசாரி எதிர்க் கட்சிகள் அதில் பங்குபற்றாமல், ஆதரவை மாத்திரம் வழங்கி ராஜபக்ச அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருந்தன.

இந்தப் பின்புலத்தில் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனச் செல்வாக்குகளைக் கட்டுப்படுத்தித் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்த அமெரிக்க - இந்திய அரசுகள் வகுக்கும் வியூகங்களில் இலங்கைத்தீவு முக்கியமான வகிபாகத்தில் இருப்பது புரிகிறது.

அதேநேரம் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் ஆதரவு வியூகம் என்பது, ரஷ்ய உக்ரைன் போர் விவகாரத்தில் இந்தியா தம்மோடு நிற்பதற்கான கடும் அழுத்தத்தைக் கொடுக்கும் உத்தியே. அத்துடன் உக்ரைன் போர் தீவிரமடையும் நிலையிலும், பாகிஸ்தான் - இலங்கை ஆகிய நாடுகளில் தொடராக இடம்பெற்று வரும் போராட்டங்களின் பின்னணியிலும், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனச் செல்வாக்கை எதிர்கொள்ள அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அணுச்சக்தி நீர்மூழ்கி கப்பல் படையை உருவாக்கத் திட்டமிட்டுள்ள உத்தி 'தரமான' ஒரு இராணுவ வியூகமாகும்.

அந்த வியூகத்துக்குள் இந்தியாவையும் தம் பக்கம் இழுக்கும் அமெரிக்க அணுகுமுறை பிரதானமாகத் தெரிகிறது. ஏனெனில் உக்ரைன் போரில் இந்தியா, ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயற்படுவது மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குப் பாதிப்பு. இதனை அமெரிக்கா உணருகின்றது.

அதேபோன்று பாகிஸ்தானில் இம்ரான்கானுக்கு ஆதரவான போராட்டங்களைத் தூண்டி மீண்டும் சீன ஆதரவு ஆட்சியை உருவாக்க சீனாவும் வியூகங்களை வகுத்து வருகின்றமை பட்டவர்த்தனம்.

இந்தப் பின்புலத்திலேதான் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியாவை உள்ளடக்கிய 'அக்கியூஸ்' ஒப்பந்தத்தில் இந்தியா இணைந்து கொள்ளவேண்டுமென பிரித்தானியா கடந்த ஜனவரி மாதம் அழைப்பு விடுத்திருந்தது.

ஆனால் புவிசார் அரசியல் - பொருளாதார நெருக்கடிச் சூழலில் இந்தியா அதில் இணைவது சாத்தியமற்றதாகத் தோன்றினால், அது 'கடுமையான நடவடிக்கையாக' இருக்கும் என்று நரேந்திர மோடிக்கு ஆதரவான என்.டி.ரீவி நியூஸ் விமர்சித்துள்ளது. ஆனால் மோடி அரசு இது பற்றி அதிகாரபூர்வமாகக் கருத்துக் கூறவில்லை.

இந்தோ - பசுபிக் பாதுகாப்புக்காக 2017 இல் உருவான 'குவாட்' என்ற இராணுவக் கூட்டணியில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளும் இணைந்திருக்கும் நிலையில்,'அக்கியூஸ்' என்ற பாதுகாப்புக் கூட்டணியும் 2021 செப்ரெம்பரில் உருவாக்கப்பட்டுத் தற்போது அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை அவுஸ்திரேலியாவுக்கு வழங்கும் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளையும் தவிர்த்துக் கைச்சாத்திடப்பட்ட 'அக்கியூஸ்' ஒப்பந்தம் குறித்து இந்தியா ஆரம்பம் முதல் அதிருப்தியை வெளியிட்டு வருகின்றது. பிரான்ஸும் பகிரங்கமாக எதிர்த்துள்ளது.

'அக்கியூஸ்' என்ற இந்தோ - பசுபிக் பாதுகாப்புக் கூட்டணி, 'குவாட் 'அமைப்போடு தொடர்பானது அல்ல என்று இந்திய வெளியுறவுச் செயலர் ஹர்ஷ்வர்தன் தெரிவித்திருந்தார் இந்தியாவின் கவனத்தை 'அக்கியூஸ்' என்ற பாதுகாப்புக் கூட்டணி சிதைத்துள்ளதாக 2021 செப்ரெம்பரில் ஒப்பந்தம் கைச்சாத்தான போது ஓர் ஆங்கில செய்தித் தளத்துக்கு ஹர்ஷ்வர்தன் கூறியிருந்தார். 'அக்கியூஸ்' கூட்டணியில் இந்தியா இணைந்தால் ரஷ்யா என்ற நம்பகமான கூட்டாளியின் கடும் விமர்சனத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று என்.டி.ரீவி உள்ளிட்ட இந்திய ஊடகங்கள் விமர்சித்திருந்தன.

2021 ஒக்ரோபர் பதினொராம் திகதி கைச்சாத்திடப்பட்ட'அக்கியூஸ்' ஒப்பந்தத்தின் பிரகாரம், இந்த மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் திட்டம் பற்றி அமெரிக்காவின் கலிபோர்னியா சான்டியாகோ நகரில், பிரிட்டன், அவுஸ்திரேலிய பிரதமர்களுடன் இணைந்து ஜோ பைடன், அறிவிப்பை வெளியிட்டார். இந்த ஒப்பந்தத்தை இந்தியா, அரசியல் ரீதியாக ஆதரித்தாலும், புதுடில்லி அந்த ஒப்பந்தத்தில் சேர வாய்ப்பில்லை என்றும், இந்தியாவுக்கு அணுசக்தியால் இயங்கும் புதிய தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பல்கள் தேவைப்படுவதாகவும் இந்தியப் பாதுகாப்புத் தரப்புகளை மேற்கோள் காட்டி இந்தியன்ரீவி நியூஸ் (indiatvnews) செய்தி வெளியிட்டுள்ளது.

உக்ரைன் போரினால் சர்வதேசத் தடைகள் மற்றும் அழுத்தங்களை ரஷ்யா எதிர்கொண்டுள்ள நிலையில், இந்தியாவுக்கு நீர்மூழ்கிக் கப்பல்கள் வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை. ஆனால் அவுஸ்திரேலியக் கடற்படை அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இயக்குவதை இந்தியா விரும்பவில்லை என்று 'த இந்து' கூறுகின்றது. ஆனால் இந்தோனேஷியா பகிரங்கமாக எதிர்த்தமை போன்று எதிர்ப்பு வெளியிடாமல், இந்தியா பார்வையாளராக மாத்திரம் உள்ளது. அதேநேரம் அக்கியூஸ் ஒப்பந்தம் மூலமான அவுஸ்திரேலிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் திட்டத்தை ஜப்பான் ஆதரித்துள்ளது. ஆகவே 'அக்கியூஸ்' ஒப்பந்தத்துக்கு எதிரான கருத்துடைய பிரான்ஸ் அரசுடன் பாதுகாப்பு நல்லுறவுகளைப் பேணி அதன் மூலம் பிரான்ஸ் ஆதரவு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று இந்தோ - பசுபிக் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே இந்தியாவுக்குத் தற்போது அவசியமாகவுள்ள அரசியல் வியூகமாகும்.

அதேபோன்று இலங்கைத்தீவில் அமெரிக்கச்சார்பு ஆட்சி மாற்றங்களுக்கு ஒத்துழைப்பதைத் தவிர்த்து, ஈழத்தமிழர் அரசியல் விடுதலை உள்ளிட்ட இலங்கைத்தீவு குறித்த இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் சமகாலப் புவிசார் அரசியல் - பொருளாதாரப் பின்னணி இந்தியாவுக்கு உணர்த்தி நிற்கின்றது.

இந்தத் தந்திரோபாயத்தின் மூலமே இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இந்தியா, தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். பிராந்தியச் செல்வாக்கும் உயரும்.


இந்தோ - பசுபிக் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, சர்வதேச உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றை மையப்படுத்தி பிரான்ஸ் - இந்தியா ஒருங்கிணைந்து நேர்மறையான பங்களிப்பை வழங்குவதாக பிரதமர் நரேந்திரமோடி கூறினார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி . 250 பயணிகள் விமானத்தை பிரான்ஸிடம் கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட பின்னர் உரை நிகழ்த்தியபோதே மோடி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

2011 மே மாதம் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் பிரான்ஸ் அரசுடன் இந்தியா ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தமையும் இங்கே கவனிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நழுவும் தீர்வு



மீரா ஸ்ரீனிவாசன்

பெருந்திரளான பௌத்தபிக்குகள் இலங்கை நாடாளுமன்றத்துக்கு அருகாக, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் பிரதியொன்றை கடந்த பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் தீயிட்டுக் கொளுத்தினர். அந்தத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதற்கு தங்களது எதிர்ப்பை அவர்கள் வெளிக்காட்டினர். தற்போதைய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவர் என்ற வகையில் தனது பொறுப்பு என்று ரணில் சர்வகட்சி மாநாடொன்றில் கூறியிருந்தார்.

"சுமார் 37 வருடங்களாக 13ஆவது திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இருந்துவருகிறது. நான் அதை நடைமுறைப்படுத்தவேண்டும் அல்லது எவராவது அதை இல்லாதொழிக்கவேண்டும்" என்று ஜனாதிபதி தெரிவித்தார். எந்த வகையிலும் நாட்டைப் பிளவுபடுத்த தான் தயாரில்லை என்றும் சிங்கள தேசத்துக்குத் துரோகம் செய்யப்போவதில்லை என்றும் அவர் உறுதியாகக் கூறியபோதிலும் பிக்குகள் அந்தத் திருத்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவே செய்தனர்.

**13 ஆவது திருத்தம் எப்போதும் சர்ச்சைக்குரியதாகவே இருந்துவருகிறது. 13 ஐ எதிர்க்கின்ற சிங்களவர்களைப் பொறுத்தவரை அது இந்தியாவினால் திணிக்கப் பட்டது என்றே நோக்குகிறார்கள். மாகாண மட்டத்தில் தமிழர்களுக்கு – அளவு கடந்த அதிகாரங்களை – அந்தத் திருத்தம் வழங்குகின்றது. அதனால் கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்துக்கு 13 ஒரு அச்சுறுத்தலாக அமைகிறது.**

### நிறைவேற்றப்படாத ஒரு உறுதிமொழி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறுதிமொழியோ அல்லது பிக்குகளின் எதிர்ப்போ இலங்கைக்குப் புதியவையல்ல. மஹிந்த ராஜபக்ச உட்பட முன்னைய ஜனாதிபதிகளும் பல தடவைகள் அதே உறுதிமொழியை வழங்கினார்கள். அப்போதும் இதே பிக்குகளும் ஏனைய பிற்போக்குக் குழுவினரும் இதேபோன்று ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர்.

அதேவேளை, சமத்துவம், கௌரவம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையைத் தொடர்ச்சியாக முன்வைத்துப் போராடிவருகின்ற இலங்கைத் தமிழர்களுக்கும் 13ஆவது திருத்தம் 'உண்மையில்' நடைமுறைப்படுத்தப்பட்டால் அது எதைப்போன்று இருக்கக்கூடும் என்பது தெரியாது. அதிகாரப் பரவலாக்கம் அரசியலமைப்பில் சுமார் நான்கு தசாப்தங்களாக இருந்து வருகின்ற போதிலும் (1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவு அது) அந்தத் திருத்தச்சட்டம் அதன் எழுத்திலும் உணர்விலும் இன்று வரை நடைமுறைப்படுத்தப்பட்டதை அவர்கள் ஒரு போதும் கண்டதில்லை.

13 ஆவது திருத்தம் எப்போதுமே சர்ச்சைக்குரியதாகவே இருந்துவருகிறது. 13 ஐ எதிர்க்கின்ற சிங்களவர்களைப் பொறுத்தவரை அது இந்தியாவினால் திணிக்கப்பட்டது என்றே நோக்குகிறார்கள். மாகாண மட்டத்தில் தமிழர்களுக்கு 'அளவு கடந்த அதிகாரங்களை' அந்தத் திருத்தம் வழங்குகின்றது என்றும் அதனால் கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்துக்கு '13' ஓர் அச்சுறுத்தலாக அமைகிறது என்றும் சிங்களவர்கள் நம்புகிறார்கள். இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் ஒரேயளவான அதிகாரங்களையே திருத்தம் பரவலாக்குகிறது என்ற உண்மையை கருத்திற்கொள்ளாமல் அவர்கள் அந்த நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் ஏழு மாகாணங்கள் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவையாகும்.

மறுபுறத்தில் தமிழர்கள் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் 13ஆவது திருத்தம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டளவு அதிகாரங்களையே தருகிறது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். அர்த்த புஷ்டியான அதிகாரப்பரவலாக்கத்தை அது செய்யவில்லை என்று அவர்கள் குறை கூறுகிறார்கள். அதேவேளை தமிழர்களில் சிலர், திருத்தம் போதுமான அதிகாரங்களைத் தரவில்லை என்று பரவலாகக் கருதினாலும் கூட ஒருவகையான அதிகாரப்பகிர்வை உத்தரவாதம் செய்கின்ற ஒரேயொரு சட்ட ஏற்பாடாக தற்போது இருப்பதால் அதை முழுமையானதும் நிலைபேறானதுமான அரசியல் இணக்கத் தீர்வொன்றுக்கான பேச்சுவார்த்தையின் 'தொடக்கப் புள்ளியாக' நோக்குகிறார்கள்.

அந்தத் திருத்தம் மாகாணங்களுக்கு விவசாயம், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, உள்ளூராட்சி, திட்டமிடல், வீதிப்போக்குவரத்து மற்றும் சமூக சேவைகளில் சட்டவாக்க அதிகாரத்தை கொடுத்த போதிலும் பல பொருள்படக்கூடியதாக அமைந்திருக்கும் பொதுப்பட்டியல் மற்றும் அரசியலமைப்பின் விஞ்சிய மதிப்புடைய சில பிரிவுகள் காரணமாக மத்திய அரசாங்கமே மிகவும் பலம்பொருந்தியதாக இருக்கிறது.

### தமிழர்களின் ஈடுபாடுகள்

எதிர்பாராத முறையில் இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சில மாதங்களில் விக்கிரமசிங்க நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு இலங்கையின் சுதந்திரதினமான 2023 பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னதாக அரசியல் தீர்வொன்று காணப்படுவதை உறுதி செய்யப்போவதாக அறிவித்தார். மிகவும் குறுகிய கால அவகாசத்தைக் கொண்ட அவரது அந்த அறிவிப்பு 'இப்போது இல்லாவிட்டால் தீர்வு எப்போதுமில்லை' என்ற தொனியில் அமைந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட இணங்கியது. என்றாலும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியின் நேசக்கரத்தில் ஐயுறவு இருந்தது. கூட்டமைப்பின் போட்டிக் கட்சியான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி , சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வு குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி பகிரங்கமாக முன்வராதபட்சத்தில் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்ற தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்தது.

முதலில் இருந்தே தொடங்குவதற்கு பதிலாக ஐந்து அம்சங்களில் அரசாங்கம் உடனடியாக சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்குச் சென்றது.

தேசிய காணி ஆணைக்குழுவையும் மாகாணப் பொலிஸ்படையையும் அமைத்தல் மாகாணசபைகளுக்கு மீண்டும் அதிகாரங்களைக் கொடுப்பதற்கு குறிப்பிட்ட சில சட்டங்களை மாற்றியமைத்தல் அல்லது திருத்துதல் பாடசாலைகளையும் மருத்துவமனைகளையும் நிர்வகிப்பதற்கு அவசியமான நிர்வாக அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குதல் என்பவையே அந்த யோசனையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால், அந்த விவகாரங்கள் தொடர்பில் எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காத நிலையில் பேச்சுவார்த்தைகளை தொடருவதில் அர்த்தமில்லை என்று கூட்டமைப்பு கூறியது.

கூட்டமைப்பின் தலைவரும் முதுபெரும் அரசியல்வாதியுமான இரா.சம்பந்தன் 2019 ஜூலையில் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையொன்றில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடந்த காலத்தில் பல்வேறு அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட பல முயற்சிகள் 1987ஆம் ஆண்டின் 13ஆவது திருத்தத்தில் விதந்துரைக்கப்பட்டிருப்பவற்றுக்கும் அப்பால் அதிகாரங்களை வழங்கக்கூடிய யோசனைகளைக் கொண்டிருந்தன என்று விளக்கமளித்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் பதவிக்காலத்தில் 1991ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்க தெரிவுக்குழு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதிகாரத்தில் இருந்தபோது 2000ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு யோசனைகள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அதிகாரத்தில் இருந்தபோது நியமிக்கப்பட்ட பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதித்துவக் குழுவின் யோசனைகள், மைத்திரிபால சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்கக் காலத்தில் புதிய அரசியலமைப்பு ஒன்றை வ்ரைவதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் ஆகியவற்றை சம்பந்தன் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

அரசியல் உரிமைகளுக்கான தமிழ்ச் சமூகத்தின் நீண்டகாலப் போராட்டங்களை விளக்கி மிகவும் மனதை நெகிழவைக்கும் வகையில் உரையாற்றிய அவர், "தமிழர்கள் தனித்துவமான மொழியையும் கலாசார அடையாளத்தையும் கொண்ட தனித்துவமான மக்களாவர். வரலாற்று ரீதியாக நாம் வடக்கு, கிழக்கில் வாழ்ந்துவந்திருக்கிறோம். இரண்டாம்தர குடிமக்களாக எம்மால் வாழமுடியாது. நாம் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழவேண்டும். சாத்தியமானளவுக்கு கூடுதல்பட்ச அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். ஐக்கியப்பட்ட, பிளவுபடாத, பிரிக்கமுடியாத இலங்கையொன்றுக்குள் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். எமது விதியைத் தீர்மானிப்பவர்களாக நாமே இருக்கவேண்டும்" என்று கூறினார்.

"இதை எவ்வளவு விரைவாக நீங்கள் செய்கிறீர்களோ அந்தளவுக்கு நல்லது. இதைச் செய்யவில்லையானால், நல்ல காரியத்தை செய்வதை நீங்கள் தவிர்த்தால் தமிழ் மக்கள் நீண்டகாலத்துக்கு அமைதியாக இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை" என்று சபையில் சம்பந்தன் முழங்கினார்.

ஆனால், மேற்கூறப்பட்ட முயற்சிகள் சகலதினதும் முடிவுகள் கடதாசியில் அல்லது நிறைவேற்றப்படாத நீண்ட உறுதிமொழிகளின் வரிசையில் பத்தோடு பதினொன்றாகவே இருந்தன. வழங்கிய எந்த உறுதிமொழி தொடர்பிலும் ஆளும் சிங்கள அதிகாரவர்க்கம் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.




(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு.நிருஷிகன்
தரம் -6
(யா/கொக்குவில் இந்துக்கல்லூரி)




L.அக்ஷயா
தரம்- 2
கிளி/ தருமபுரம் அ.த.க. பாடசாலை



மு .அட்ஷயா
தரம் 10
(யா/இந்து மகளிர் கல்லூரி)



சு.ஆருஷன்,
தரம் -3 B
(யா /செட்டித்தெரு மெ.மி.த.க.)



ச.கம்சாயினி
தரம்: 5
யா/ வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்




புவனேந்திரன் ஜீவேந்திரன்
தரம்- 7
யா/இந்துக் கல்லூரி



எஸ்.மதுசாயினி,
தரம் -8D
(விபுலானந்தா கல்லூரி)




து.அஜிந்,
தரம் - 09
யா/மந்துவில்
றோ.க.த.க.பாடசாலை

**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# மீண்டும்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்மனித இழப்புகளுடனும் தமிழர்களுக்குச் சொல்லொணா அவலங்களுடனும் உள்நாட்டுப் போர் 2009 ஆண்டு முடிவுக்கு வந்தபோது நீதியான அரசியல் தீர்வுடன் கூடிய உண்மையான நல்லிணக்கத்துக்கு வாய்ப்பொன்று தோன்றுவதாக நோக்கப்பட்டது. தவறவிடப்பட்ட பல வாய்ப்புக்கள் தமிழர்களைப் பொறுத்தவரை ஒரேயொரு விடயத்தை தெளிவாக உணர்த்தியது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கர்ண்பதற்கான அரசியல் துணிவாற்றல் இல்லை என்பதே அதுவாகும். நாட்டுப் பிரிவினை யோசனையை தமிழர்கள் கைவிட்டு இப்போது பல வருடங்கள் கடந்துவிட்டபோதிலும் பிரிவினைப் பூச்சாண்டியை சில சிங்கள அரசியல்வாதிகள் இன்னமும் காட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். அல்லது போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்தியை ஒரு மாற்றுத் தீர்வாக அவர்கள் முன்வைக்கிறார்கள்.

## இந்தியத் தலையீடு

தேசிய் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க தனக்குத்தானே விதித்த காலக்கெடு ஒருமாதத்துக்கு முன்னர் காலாவதியாகிவிட்டது. சில இலங்கையர்கள் தாங்கள் இன்னமும் இரண்டாம்தர குடிமக்களாகவே நடத்தப்படுவதாக உணர்கின்ற போதிலும் 75ஆவது சுதந்திர தினத்தை அரசாங்கம் பெரும் எடுப்பில் கொண்டாடியது. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி ஏற்கனவே மங்கிப்போய்விட்டது.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி, கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் இன்னமும் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள் பிரிவினரின் புதிய ஆர்ப்பாட்ட அலை என்பனவே இலங்கையில் இன்று பிரதான தலைப்புச் செய்திகள். இலங்கையின் கடன்களை மறுசீரமைப்புச் செய்வதற்கு சீனா இணங்கியதை அடுத்து நாணய நிதியத்தின் கடனுதவி இலங்கையின் கைக்கு எட்டக்கூடியளவுக்கு அண்மையாக வந்துவிட்டது எனலாம். 'ஏனைய விவகாரங்கள் எல்லாவற்றுக்கும் முன்னதாக பொருளாதார மீட்சி' என்ற அணுகுமுறையை அரசாங்க ஆதரவாளர்கள் கடைப்பிடிக்கும் நிலையில் நீண்டகாலமாகத் தீர்வு காணப்படாமல் இருக்கும் இனநெருக்கடியை கையாளுவதில் விரைவில் அக்கறை காண்பிக்கப்படக் கூடிய அறிகுறியைக் காணமுடியவில்லை.

இலங்கையின் தமிழ்த் தேசியப் பிரச்சினையில் வரலாற்று ரீதியாக இந்தியா ஒரு பிணக்குத்தீர்க்கும் பங்கை வகித்துவந்திருக்கும் அதேவேளை இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் அக்கறையும் செல்வாக்கும் அருகிக் கொண்டே போகிறது என்று தமிழ் அரசியல்வாதிகளிலும் தமிழ்ச் சமூகத்திலும் பலர் கூறுகிறார்கள். இலங்கையில் சீனாவின் செல்வாக்கைத் தடுப்பதற்கான முயற்சிகளில் தீவிர கவனத்தைச் செலுத்தும் புதுடில்லி 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை குறித்து வழமையான அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர வேறு எதையும் அது விடயத்தில் பெரிதாகச் செய்வதில்லை என்று அவதானிகள் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய நிலைமை இலங்கையின் வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தை எங்கு கொண்டுபோய்விடும்? பலதசாப்த கால போராட்டங்கள், ஆயுத மோதல்களுக்குப் பிறகு இன்னமும் தமிழ் மக்கள் நீதி, சமத்துவம் மற்றும் கௌரவத்தைக் கோருகிறார்கள். அரசியல் தீர்வு நீண்டகாலமாக நழுவிக்கொண்டே செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலாசம்

உடுவில் அரவிந்தன்



சஞ்சீவி சிறுகதை

நான் வெளிவிறாந்தையிலுள்ள கயிற்றுக்கட்டிலில் படுத்திருக்கிறேன். விடிந்து நீண்டநேரமாகிவிட்டது. ஆனாலும், எண்பத்தைந்துவயதின் தளர்ச்சி காரணமாகப் படுக்கையை விட்டு எழமுடியவில்லை. வயோதிகம் உடலை மட்டுமல்லாது, மனதையுங்கூடச் சோர்வடைய வைத்துவிடுகிறது. தலையைத் தூக்கிப் பார்க்கிறேன். வீடு அமைதியாகக் கிடக்கிறது. பேரப்பிள்ளைகள் வேலைகளுக்குப் போய்விட்டார்கள். மருமகனின் மோட்டார்சைக்கிளையும் காணவில்லை. மகள் பெரும்பாலும் சமையலறைக்குள் இருக்கக்கூடும்.

மெதுவாக எழுந்து அமர்ந்துகொள்கிறேன். தலைமாட்டில் எப்போதோ வைத்த தேநீர் ஆறிக்கிடக்கிறது. கோப்பையின் விளிம்பில் எறும்புகள் மொய்த்திருக்கின்றன. எறும்புகளைத் தட்டிவிட்டுக் குடிக்கிறேன். வயதாகிவிட்டாலே கவனிப்புக் குறைந்துவிடுமென்பது அநேகமாக உண்மைதான். ஆனாலும், அதைப் பெரிதுபடுத்துவதால் என்ன கிடைக்கப்போகிறது? ஒவ்வொருவருக்கும் ஆயிரம் பிரச்சினைகள்.

நான் கோப்பையை வைத்துவிட்டுப் புகையிலைத் துண்டொன்றை முறுக்கி வாயில் போட்டுக்கொள்கிறேன். தேநீர்குடித்த வாய்க்கு இதமாக இருக்கிறது. கண்களைமூடி அந்தச் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். திடீரென்று ஆலடிச்சந்திப்பக்கம் பலத்த சத்தம் கேட்கிறது. வாகனமொன்று இரைந்து உருள்வதைப் போன்ற பேரோசை. 'அங்கு என்ன நடக்கிறது?" மனம் பலவாறாக யோசித்துக் குழம்புகிறது.

வாகனச்சத்தம் மீண்டும் தடதடவென்று கேட்கிறது. எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. அதைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் அலைக்கழிக்கிறது. சுவரிலே சாத்தியிருந்த கம்பை எடுத்து ஊன்றியபடி எழுகிறேன். முதுகை நிமிர்த்தவே சிரமமாக இருக்கிறது. ஒருமாதிரித் தாழ்வாரத்தால் இறங்கிச் சமையலறைப் பக்கம் திரும்பிப் பார்க்கிறேன். மகளின் தலைக்கறுப்புத் தெரிகிறது.

"எங்கை ஐயா வெளிக்கிடுகிறியள்?"

நான் திடுக்கிட்டுத் தடுமாறுகிறேன்.

"உதிலை..... சந்திப்பக்கம் பிள்ளை....."

"சும்மா கிடவுங்கோ. அங்க றோட்டுப் போடுறாங்களாம். விழுந்து கையைக் காலை முறிச்சுப்போட்டு.... பிறகு எங்களுக்குத்தான் கரைச்சல்" அவள் எரிந்து விழுகிறாள்.

"நான் அந்தப்பக்கம் போகேல்லையெணை. சும்மா வாசல்ல நிண்டு பாத்திட்டுவாறன்" சொல்லிவிட்டுப் பதிலை எதிர்பாராமல் நடக்கத்தொடங்குகிறேன். "வயதுபோனாச் சொல்வழி கேளாதுகள்" அவளின் முணுமுணுப்பு முதுகுக்குப் பின்னால் கேட்கிறது. நான் அதைப் பொருட்படுத்தவில்லை. படலையடியில் நின்று எட்டிப்பார்க்கிறேன். ஆலடிச்சந்தியில் மஞ்சள்நிறமான வாகனமொன்று முன்னும்பின்னும் அசைவது தெரிகிறது. அந்த இடமெங்கும் புழுதிப்படலம் மூடியிருக்கிறது. தயக்கத்துடன் வீட்டைத் திரும்பிப் பார்த்துவிட்டுச் சந்தியைநோக்கி நடக்கிறேன்.

முச்சக்கரவண்டிகளும், மோட்டார்சைக்கிள்களும் கண்மண்தெரியாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. வீதியில் நடக்கவே பயமாயிருக்கிறது. ஒருவாறு சமாளித்தபடி சந்தியை நெருங்கிவிட்டேன். அங்கு கனரகவாகனமொன்று வீதியோரங்களை வழித்துத் துடைத்துக்கொண்டிருக்கிறது. அதை நாலைந்துபேர் மேற்பார்வைசெய்கிறார்கள். அவர்களில் அதிகாரியைப்போன்ற ஒருவன் தள்ளி நின்றவாறு அலைபேசியில் உரையாடிக்கொண்டிருக்கிறான்.

நான் அந்தச் சூழலைப் பார்த்ததும் அதிர்ந்துபோகிறேன். நான்குபக்கமும் விழுதுகளையெறிந்து விசாலமாக நின்ற ஆலமரம் அடியோடு புரட்டிப்போடப்பட்டிருக்கிறது. கிணற்றுக்கு அருகிலிருந்த தண்ணீர்த்தொட்டி தரைமட்டமாகக் கிடக்கிறது. சுமைதாங்கி பற்றைக்குள்ளே புரண்டுகிடக்கிறது. ஆவுரோஞ்சிக் கல்லை எங்குமே காணோம். இத்தனை வேலைகளும் நடந்தபோது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்கிறேன்.

"அங்கால தள்ளிப்போங்கோ ஐயா!" அங்கிருந்தவர்களில் ஒருவன் என்னை விரட்டுகிறான்.

நான் பின்னோக்கி நகர்ந்து கிணற்றுக்கட்டில் அமர்ந்துகொள்கிறேன். சோளகக் காற்று புழுதியை அள்ளிக்கொண்டு போகிறது. துண்டுதுண்டாகக் கிடக்கும் ஆலமரத்தைப் பார்க்கும்போது மனதில் சுமையேறுகிறது. இந்த மரமும், பொதுக்கிணறும் என் வாழ்வோடு பின்னிப்பிணைந்தவை. ஒவ்வொரு பிராயத்திலும் ஒன்றாகப் பயணித்தவை. கிணற்றுக்கட்டில் இருந்தபடி நண்பர்களுடன் உரையாடிய நீண்டபொழுதுகள் நினைவுக்கு வருகின்றன.

இந்த ஆலமரம் எத்தனையோ சம்பவங்களுக்கு மௌனசாட்சியாக இருந்திருக்கிறது. நூறு ஆண்டுகளைக் கடந்த வாழ்வென்பது மனிதர்களுக்குத் தண்டனையாகக் கருதப்பட்டாலும், பெருமரங்களைப் பொறுத்தவரை அதுவோர் அற்புதமான வரம். ஆனால், அந்த வரத்தை ஆனந்தமாக அனுபவிப்பவை ஏனைய உயிரினங்கள்தான். ஆலமரம் பழுத்துச் சிலிர்க்கும் பருவங்களில் வந்து சேர்கின்ற பறவைகளின் பாடல்கள் இனிக் கேட்கப்போவதில்லை. அது பெருங்குடையாக நின்று விரிக்கின்ற நிழலை எவர் தரப்போகிறார்? கீழே சிதறிக் கிடக்கும் கூடுகளும், பறக்கமுடியாமல் தத்தளிக்கும் காகக்குஞ்சுகளும், உடைந்து நொறுங்கிய முட்டைகளும் ஒரு தலைமுறை அழிக்கப்பட்டதற்குச் சான்றுகளாகத் தெரிகின்றன.

காலம் மிகவும் பொல்லாதது. கடுகளவுகூட இரக்கமற்றது. திரும்பப் பெறமுடியாத அரியசெல்வங்களை அது பறித்துக் கொண்டு போய்விடுகிறது. கைகளில் அதிகாரங்களுடன் கதிரைகளைச் சூடேற்றுகின்ற பலர் பழைமையானவற்றைப் பேணிப் பாதுகாக்கிறார்களாவென்றால், இல்லையென்றே சொல்லவேண்டும்.

நான் அயர்ச்சியுடன் அங்குமிங்கும் பார்க்கிறேன். சந்தியின் மூலையில் சிதம்பரப்பிள்ளையரின் பதினாறு பரப்புக்காணி வெறுமையாகத் தெரிகிறது. இருபது வருடங்களுக்கு முன்னர் அங்கு மிகப்பெரிய நாற்சார்வீடு இருந்தது. விதம் விதமான பூமரங்களாலும், பழமரங்களாலும் வளவுமுழுக்கச் சோலையாகக் கிடந்தது. எல்லாமே அழிந்துபோய், இப்போது நுழைவாயிலின் இரண்டு தூண்கள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன.

நான் பழைய நினைவுகளுக்குள் மூழ்கிப்போகிறேன். சிதம்பரப்பிள்ளையருக்குக் கூடப்பிறந்தவர்களென்று யாருமில்லை. தனிப்பால் குடித்து வளர்ந்தபடியால் அவர் தறுதலையென்ற பெயரைச் சிறுவயதிலேயே பெற்றுவிட்டார். அவருடைய தகப்பனார் திருஞானசம்பந்தமுதலியாரை எனக்குத் தெரியாது. ஆனால், ஆளுயரப் புகைப்படமொன்று வீட்டின் முன்விறாந்தையில் தொங்கியதைக் கண்டிருக்கிறேன். கறுப்புக்கோட்டணிந்து தலைப்பாகையுடன் கம்பீரமாக இருப்பார். அவர் ஆங்கிலேய நீதிமன்றிலே கடமையாற்றியவர். முதலியார் என்றாலே எல்லோருக்கும் குலைநடுக்கம்தான். அவருடைய குதிரைவண்டி தூரத்தில் வருவதைக் கண்டதும் தலைதெறிக்க ஓடியொளிப்பார்களாம். அவர் அந்தளவுக்கு அதிகாரமும், சண்டித்தனமும்மிக்கவராக இருந்திருக்கிறார்.

சிதம்பரப்பிள்ளையருக்குப் பள்ளிப்படிப்பு ஏறவில்லை. அதனால், ஐந்தாம் வகுப்போடு பாடசாலைக்குச் செல்லாமல் நின்றுவிட்டாராம். அவருடைய தகப்பனாரும் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. தான் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களைப் பராமரிப்பதற்கே ஆளில்லாமல் இருக்கும்போது, சிதம்பரப்பிள்ளை படித்து என்ன ஆகப்போகிறதென்று சொல்லிக்கொள்வாராம்.

திருஞானசம்பந்தமுதலியாரின் திடீர்மரணத்துக்குப் பின்னரே சிதம்பரப்பிள்ளையரின் அட்டகாசங்கள் அதிகரித்ததாகச் சொல்வார்கள். அவரை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதாம் ஆண்டுக்குப் பின்னர் ஓர் இளைஞராகத்தான் எனக்குத்தெரியும். அவர் தியாகராஜபாகவதரின் தீவிரமான ரசிகர். எப்போதும் பாகவதரைப்போன்ற முடியலங்காரத்துடன் இருப்பார். பத்துவிரல்களிலும் வைரமோதிரங்களை மாட்டிக் கொண்டு காரில் ஒருசுற்றுச் சுற்றினாரென்றால் எல்லோருடைய கண்களும் அவர்மேல்தான். அவருடைய உடலிலிருந்து கமழும் உயர்ந்த நறுமணத்தைச் சுவாசிப்பதற்காகச் சின்னஞ்சிறு வட்டுக்கள் பின்னால் இழுபட்டுத் திரிவார்கள். போதாக்குறைக்கு வீட்டின் முன்விறாந்தையில் வைத்துக் கதறவிடுகின்ற கிராமபோன் பாட்டுக்களைக் கேட்பதற்காகவே இதே ஆலமரத்தின்கீழ் ஒரு கூட்டம் காத்திருக்கும்.

கொழுப்பெடுத்த நாம்பன்போல ஊர்மேய்ந்து திரிந்தவரை, தாய்க்கிழவி அமர்த்திப்பிடித்து ஒரு கல்யாணத்தைக் கட்டி வைத்தது. சிவாஜிகணேசனின் பராசக்தி திரைப்படம் வெளிவந்த ஐம்பத்திரண்டாம் ஆண்டில் அவருக்குத் திருமணமானது. அவருக்கு வாய்த்த மனைவியின் பெயரும் பராசக்திதான். உண்மையில் அவள் ஓர் அப்பிராணி. சிதம்பரப்பிள்ளையர் உல்லாசமாக ஊர்க்குளவாரம் பார்த்துக்கொண்டிருக்க, தன் வீட்டுக்காரர் சமூகப்பணிகள் ஆற்றுகிறாரென்று நம்பிக்கொண்டிருந்தாள். அவர்களுக்குப் பிறந்தவை இரண்டுமே ஆண்பிள்ளைகள். இருவரும் தகப்பனார் ஸ்ரீமான் திருஞானசம்பந்தமுதலியாரை உரித்து வைத்தமாதிரி இருந்ததில் சிதம்பரப்பிள்ளையருக்குத் தலைகால்புரியாத சந்தோசம்.

அவர் தன்பெயரை நிலைநாட்டுவதற்காக எதைச்செய்யவும் தயங்கியதில்லை. அந்த விடயத்தில் கணக்குவழக்குப் பார்த்ததுமில்லை. அடகுபிடித்த நகைகளாலும், அறுதியாகிப்போன காணிகளாலும் தகப்பனார் அநியாயமாகச் சேர்த்த சொத்துக்களைப் பலவழிகளில் கரைத்துக்கொண்டிருந்தார்.

எங்கள் ஊர் மீனாட்சியம்மன்கோவில் தேர்த்திருவிழாவைச் சிதம்பரப்பிள்ளையரின் பூட்டன்காலத்திலிருந்து அவர்களே செய்துவருகிறார்கள். அம்மன் கோவில் கொடியேறிவிட்டால் சிதம்பரப்பிள்ளையரைப் பிடிக்கமுடியாது. விலையுயர்ந்த பட்டுவேட்டியும், பதினொருபவுண் தங்கவடமும், உடல்முழுக்கப் பூசிய சந்தனமும் அவருக்கு அப்படியொரு சங்கையைக் கொடுக்கும். யாழ்ப்பாணத்தின் பிரபலமான நாதஸ்வரக்கூட்டங்களைத் தேடிப்பிடிப்பார். அதுபோதாதென்று இந்தியாவிலிருந்து சோக்கான சின்னமேளங்களையும் இறக்குமதிசெய்து, இரவிரவாக ஆடவிடுவார். எல்லாம் முடிந்தபிறகு ஆளுக்கு ஒருபவுண் சங்கிலி போட்டு, தட்சிணையும் கொடுத்துப் பூரணதிருப்தியுடன் அனுப்பிவைப்பார். கொஞ்சக்காலம் அந்தத் திருவிழாவைப் பற்றியே எங்கும் பேச்சாயிருக்கும்.

சிதம்பரப்பிள்ளையருடைய அந்தரங்கங்களைப்பற்றி அறியாமலேயே பராசக்தி போய்ச் சேர்ந்துவிட்டாள். அவர் மனைவி இறந்தபிறகு பிள்ளைகளை நகரத்திலுள்ள ஆங்கிலப்பாடசாலையின் விடுதியில் தங்கவைத்துப் படிப்பித்தார். அவர்கள் தவணை விடுமுறைகளில்மட்டுமே வீட்டுக்கு வருவார்கள். ஏனைய நாள்களில் அவரையும், அவருக்கு உருசியாகச் சமைத்துப்போடும் சின்னம்மாவையும் தவிர அந்த வீட்டில் யாருமே இருப்பதில்லை.

எங்கள் ஊரில் சிதம்பரப்பிள்ளையருக்கிருந்த ஒரேயொரு போட்டியாளர் மாணிக்கவாசகர் மட்டுமே. ஓய்வுபெற்ற ஆசிரியரான அவர் கிராமசபையின் தலைவராக இருந்தவர். ஏழைமக்களுக்காக வேலைசெய்த நல்லமனிதர். சிதம்பரப்பிள்ளையரைவிடப் பதினெட்டுவயது மூத்தவர். நான் மாணிக்கவாசகருடன் சேர்ந்து திரிவதால் சிதம்பரப்பிள்ளையருக்கு என்னைக் கண்ணில் காட்டக்கூடாது. நான் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. நானுண்டு, என் அச்சுக்கூடத் தொழிலுண்டு என்றிருப்பேன்.

அப்படியான காலத்தில் ஆலடிச்சந்தியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியொன்றைக் கட்டுவதற்காக மாணிக்கவாசகர் பணம் சேர்க்கத்தொடங்கினார். அதைக் கேள்விப்பட்டவுடன் சிதம்பரப்பிள்ளையருக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஏற்கனவே அவர் கிராமசபைத்தலைவர் பதவியில் கண் வைத்திருந்தார். அதைக் கைப்பற்றுவதற்காக எத்தனையோ திருகுதாளங்களெல்லாம் செய்துபார்த்தவர். மாணிக்கவாசகர் எதைச்செய்தாலும் தான் அதற்குமேலாகச் செய்துகாட்ட வேண்டுமென்ற வீறாப்புடன் திரிவார். போதாக்குறைக்கு ஆலடிச் சந்தியை முதலியார்சந்தியாக மாற்றிக் காட்டுவதாகவும் சவால்விட்டிருந்தார். அதனால், தானே முந்திக்கொண்டு கிணற்றுக்குப் பக்கத்தில் தண்ணீர்த்தொட்டியுடன் சுமைதாங்கியையும், ஆவுரோஞ்சிக்கல்லையும் கட்டுவித்தார். சுமைதாங்கியின் முன்பக்கத்தில் "உபயம் ஸ்ரீமான். திருஞான சம்பந்தமுதலியார் சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஆண்டு 1963" என்பதைப் பொறிப்பதற்கும் அவர் மறக்கவில்லை.

அவை ஆடுமாடுகள் தண்ணீர்குடிக்கவும், முதுகுகளைத் தேய்த்துச் சுகமடையவும் பயன்பட்டதென்னவோ உண்மைதான். அத்துடன், வீதியால் நடந்துசெல்லும் வியாபாரிகளும், ஏனையோரும் தாங்கள் காவுகின்ற பொருள்களைச் சுமைதாங்கியின்மேல் இறக்கிவைத்துவிட்டு ஆலமரநிழலில் இளைப்பாறுவார்கள். சிதம்பரப்பிள்ளையர் அந்தக் காட்சியைப் பார்த்து இரசிப்பார். அங்கு தங்குபவர்களில் வெளியூர்களைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். அவர்கள் கல்லிலே பொறிக்கப்பட்ட தன் பெயரைப் பார்க்கிறார்களா என்பதையறிவதில் சிதம்பரப்பிள்ளையருக்கு ஆர்வம் அதிகம்.

இப்படியிருக்க, ஒருநாள் மாணிக்கவாசகருடன் அவர்போட்ட சண்டையை ஊரே வேடிக்கை பார்த்தது. அது நடந்தது அறுபத்தைந்தாம் ஆண்டிலென நினைக்கிறேன். ஒரு மதியநேரம் மாணிக்கவாசகர் ஆலமரத்தின்கீழ் அமர்ந்தபடி தனது பெறாமகன் கந்தசாமியுடன் கதைத்துக்கொண்டிருந்தார். நான் அவர்களுக்குப் பக்கத்தில் நின்றிருந்தேன். கந்தசாமியின் கத்தரிக்காய்மூடை சுமைதாங்கியின்மேல் கிடந்தது. மாணிக்கவாசகர் தன்னுடைய றலி சைக்கிளை ஆவுரோஞ்சிக்கல்லிலே சாத்தியிருந்தார். அவருடைய சைக்கிள் ஒய்யாரமாகச் சாய்ந்திருப்பது சிதம்பரப்பிள்ளையரின் கண்களில் பட்டுவிட்டது. அவருக்குப் பொறுக்கமுடியவில்லை. விறுவிறென்று வீதியைக் கடந்து ஓடி வந்தார்.

"உம்மட ஓட்டைச்சைக்கிளைச் சாத்தவோ நான் உதைக் கட்டிவைச்சிருக்கிறன்?" வந்தவீச்சில் சைக்கிளை உதைத்துத் தள்ளிவிட்டுச் சிதம்பரப்பிள்ளையர் கேட்டதும் மாணிக்கவாசகர் வெலவெலத்துப்போனார். கந்தசாமி சட்டென்று எழுந்துகொண்டான்.

"சிதம்பரப்பிள்ளை, ஏன் இப்ப சத்தம் போடுறாய்? இது பொதுச்சொத்துத்தானே?"

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்கோணல்

## கடவுள்

13

○ இராகவன்



சாத்தியமேயில்லையென்று உறுதியாகிவிட்ட பின்னர் நேரக்கூடியதெல்லாம் வீணான கற்பிதங்கள் தான். இதற்காகத்தானே காத்திருந்தோம்? அதை எதிர்பார்த்துத்தானே கனவுகளை நெய்தோம்? இதைத்தானே எல்லாவற்றிலும் மேலானதாகக் கருதி வந்தோம்? ஆனால் இப்போது இதுவேயில்லை என்றானபோது என்னதான் சொன்னாலும் இதுதானே உண்மையானது. தொடர்ந்து மேற்கொள்வதற்கு என்ன இருக்கிறது? இதை முழுமையா கவே மறந்து விடவேண்டும் இப்படியொன்று இருந்ததேயில்லை எனக் கருதிக்கொள்வதுதான் நன்மை பயக்கும். சாத்தியமான வேறொன்றை நோக்கிச்செல்வதுதான் அடுத்தகட்டம் என்பதைப் புரிந்து கொண்டு அடுத்தகட்டம் நோக்கிச் செல்லத்தானே வேண்டும்?

உறைந்துபோயிருப்பதால் நேரக்கூடியது எதுவுமேயில்லை. எதிர்பாராத விதமாகச் சாத்தியமாகக் கூடியதே முன்னர் சாத்தியமாகாமல் போனதற்கு மேலான சிறப்புடையதாக அமைந்து விடவும் சாத்தியமிருக்குமல்லவா? மறுப்பதற்கு வலுவான அல்லது மெய்யான காரணங்களேதுமில்லாத நிலையில் அந்த நிலையை நோக்கிச் செல்வதும் முழுநிறைவளிக்கக் கூடியதாகவேயிருக்கும். கற்பிதங்களில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்காமல் விடுபட்டு வெளியேபறந்துசெல்லத்தயாராகவேண்டியிருக்கிறது. அதுவேதான் மிகச்சிறந்த தீர்வாக அமையும்.

நாங்கள் அமுதம் எனக் கற்பிதம் செய்து வந்திருப்பதை ஏதோவொரு வழியில் கைப்பற்றியவர் அதை அருந்திக்கொண்டிருப்பதை ஏக்கத்தோடும் விரக்தியோடும் பொறாமையோடும் பார்த்துக்கொண்டிருப்பதைத்தவிர வேறென்ன தான் செய்துவிட முடியும்? எனக்கேட்டால் சொல்வதற்கிருப்பது ஒன்றேயொன்று தான். எதையும் அமுதம் எனக் கற்பிதம் செய்து கொள்ள வேண்டியதில்லை. அது பருகக்கூடியது அல்லது அருந்தக்கூடியது. சில வேளைகளில் மிகச்சாதாரணமானது எனக்கற்பிதம் செய்து வைத்திருப்பது சுவைகூடியதாகவும் உடனடியாகத் தாகம் தணிக்கவோ பசியாற்றவோ இயலுமானதாகவிருக்கலாம். எதுவாயிருந்தாலும் தாகம் தணிவதோ பசியடங்குவதோதான் இறுதி விளைவாகப் போகிறது என்பதை உணர்ந்துகொள்வது தான் மெய்ப்பொருள்காணும்அறிவு. தொடர்ந்து அடிக்கடி உணவைப்பற்றிய அணிவகுப்பு நிகழ்வது தற்செயலானதல்ல. திட்டமிடப்பட்டதொன்றுதான். விளங்கிக் கொள்வதற்கு எளிதானதென்பதால் இது நிகழ்ந்துவிடுகிறது. எதுவிளங்கிக்கொள்ள எளிதானதோ அதுவே முக்கியத்துவம் பெறுகிறது. அது உணவாகத்தான் இருக்கவேண்டுமென்பதல்ல. வண்ணக் கனவாகவுமிருக்கலாம். கனவில் வரக்கூடிய குதிரையாகவுமிருக்கலாம். பொதி சுமக்கும் கழுதையாகவுமிருக்கலாம். குதிரையோ, கழுதையோ கற்பனை செய்கின்ற கடவுளாகவுமிருக்கலாமென்பது விதியாகும். குதிரைக்கு யார் கடவுள்? கழுதைக்கு யார் கடவுள்? அதை அந்தக் குதிரையோ, கழுதையோ தான் தீர்மானிக்கலாம். உங்களது கடவுளை நீங்கள் தானே தீர்மானித்தாக வேண்டும்? கடவுள் உணவுக்குப் பொருந்திவரக் கூடியவர் தானா? எனச் சந்தேகப்பட்டுவிடாமல் பொருத்திப்பார்க்க எத்தனிப்பது தான் வெகு சிறப்பானதாக அமையும்.

இதற்காகக் கடவுளுக்கும் உணவுக்கும் தனித்தனியே சிறப்பு மலர்களைத் தயாரிக்க வேண்டிய அவசியமேதுமில்லை.

கடவுள் ஏழைகளிடம் ரொட்டி வடிவில் வருகிறார் எனக் கேட்டிருப்போம். இதிலிருந்து கடவுளுக்கும் உணவுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பது புலனாகிறது. இதிலிருந்து உணவுக்குப் பதிலாக கடவுளை முன்வைக்கலாம். கடவுளை முன்வைக்க முடியாத ஒரு நிலை தோன்றினால் கடவுளுக்குச் சமமானதை முன்வைக்க அனுமதிக்கலாம். இதைத் தவிர வேறு மாற்று வழியேதுமில்லை. விசேட அனுமதியிருந்தால் அதனைப் பின்பற்றலாம் தேவையற்ற காலதாமதத்தை தவிர்த்துக்கொள்ள ஏற்பாடுகளிருத்தல் எனும் நிபந்தனை விதிக்கப்பட்டேயிருக்கிறது என்றால் கண்மூடித்தூங்கலாகாது என்பது மறைமுகமாகத் தெரிய வருகின்றது. ஆனால் உணவை வைத்து அணிவகுப்பது சலிக்கவில்லை என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் கடவுளைக் கொண்டுவரவேண்டியதில்லை என்பது தனியாக எடுத்துக் கூறப்பட வேண்டியதில்லையல்லவா? "

"பல்லக்கில் இடங்கிடைத்தால் ஏறிச்செல்லத் தயக்கம் காட்ட வேண்டியதில்லை. பல்லக்கைத் தூக்க அழைத்தாலும் சுமந்து செல்லத் தயங்க வேண்டியதில்லை. ஏனென்றால் ஓவியங்களில் பல்லக்கில் அமர்ந்திருப்போரையும் சுமந்து செல்வோரையும் மட்டுமே வரைந்திருக்கிறார்கள் அல்லது பல்லக்கில் அமர்ந்திருந்தோரும் சுமந்து சென்றோரும் மட்டுமே ஓவியத்தில் இடம்பெற்றிருக்கிறார்கள் . பேச்சிலே பல்லக்கைக் கொண்டு வருவோர் கால்நடையாகத் திரிந்தாலும் மற்றவரைப் பல்லக்கில் ஏற்றும் கனவைச் சம்பவிக்க வைத்துவிடுவதால் அவரைக் கேலிசெய்ய வேண்டியதில்லை.

கால்நடை என்றதுமே ஆடு, மாடு , எருமை, பன்றி, கோழி, வான்கோழி, வாத்து என்பவற்றைக் கற்பனை செய்ய உங்களுக்கு உரிமையுண்டு என்பதும் இங்கே குறிப்பிடக்கூடியதொன்றாகும். பல்லக்கில் அமர்ந்திருப்பவரையும் தேர்ந்தெடுக்க வேண்டியதும் நீங்களே தான். அதே போன்று பல்லக்கைச் சுமப்போர் நடந்து செல்வதா? ஓடிப் போவதா? என்பதையும் தீர்மானிப்பது நீங்கள் தான்.நீங்களே தான். பல்லக்கில் அமர்ந்திருப்பவர் பெருமீசை வைத்திருந்தால் அவர் அரசர். பல்லக்கில் அமர்ந்திருப்பவர் குறுமீசை வைத்திருந்தால் அவர் இளவரசர். பல்லக்கில் இருப்பவர் மீசையில்லாமல் இருந்தால் அவர் பட்டத்தரசி அல்லது இளவரசி. இதில் விதிவிலக்குமுண்டு. மென்மீசை படர்ந்த பட்டத்தரசியோ அல்லது இளவரசியோ இல்லையென்பதில்லையே. மென்மீசை படர்ந்த பட்டத்தரசியோ இளவரசியோ தோன்றிக்கொண்டுதானேயிருக்கிறார்கள்? தோன்றிடின் தோன்றாமை நன்று என்றெல்லாம் சொல்லி

உறைந்து போயிருப்பதால் நேரக்கூடியது எதுவுமேயில்லை. எதிர்பாராத விதமாகச் சாத்தியமாகக் கூடியதே முன்னர் சாத்தியமாகாமல் போனதற்கு மேலான சிறப்புடையதாக அமைந்து விடவும் சாத்தியமிருக்குமல்லவா? மறுப்பதற்கு வலுவான அல்லது மெய்யான காரணங்களேதுமில்லாத நிலையில் அந்த நிலையை நோக்கிச் செல்வதும் முழுநிறைவளிக்கக் கூடியதாகவேயிருக்கும்.

விட்டுப் போய் விட முடியாதல்லவா? அவர்களும் தோன்றத்தான் வேண்டும். பல்லக்கில் செல்லத்தான் வேண்டும். அடர்ந்த மீசைக்காரனையோ மென்மீசைக்காரனையோ மீசையில்லாதவனையோ திருமணம் செய்து கொள்ளத் தான் வேண்டும். பிள்ளைகளைப் பெற்றெடுக்கத்தான் வேண்டும் . மென்மீசை படர்ந்துவிட்டது என்பதற்காக ஒதுங்கிவிட முடியுமா?

இவர்களிடமோ அல்லது இவர்களைத் தவிர்ந்தவர்களிடமோ 'மறைவு' என்பது யாதெனக்கேட்டால் வரும் பதில் என்னவாக அமையும்? மறைவு என்பது மறைதல் அதாவது மறைந்திருத்தல். ஒளிந்திருத்தல், கரந்திருத்தல் என்றொரு பதில் கிடைக்கலாம். அல்லாவிடின் தோற்றம் என்பதற்கு எதிர்ப்பதம் மறைவு. அதாவது தோற்றம்பிறப்பு என்றால் மறைவு இறப்பு. எனவே மறைவு என்பது இறப்பைக் குறிக்கும். ஒருவர் இறப்பதை மறைவு என்றழைக்கலாம் என்பதாக இன்னொரு மறுமொழி கிடைக்கும். எது சரியானது? எது தவறானது? என விவாதிப்பதைத் தவிர்த்து இந்தப்பதில்களின் திசையில் செல்லலாம். மறைவு என்பது மறைதல் அதாவது மறைந்திருத்தல். ஒளிந்திருத்தல், கரந்திருத்தல் எனக்கூறப்பட்டிருக்கும் போது அது ஏதோவொரு நோக்கம் கருதியே நிகழ்வதாகும். யாதேனுமொரு நிகழ்வுக்கு அல்லது ஏதேனுமோரிடத்துக்கு சமுகமளிப்பதைத் தவிர்த்தல் இந்த மறைந்திருத்தலின் முதற்காரணமாகலாம். யாதேனுமொருவரை அல்லது ஒருசிலரைச் சந்திப்பதைத் தவிர்த்தல் பிறிதொரு காரணமாகலாம். ஏன் சமுகமளிக்கவில்லை? ஏன் சந்திக்கவில்லை? எனக்கேட்டால் உயிருக்கு அச்சுறுத்தலிருக்கலாம். விமர்சனங்களை எதிர்கொள்ள விரும்பாதிருக்கலாம். கேள்விகளுக்குப் பதிலளிப்பதை தவிர்த்துக்கொள்வதற்காகவுமிருக்கலாம் .நியாயமான காரணமேதுமில்லாமலுமிருக்கலாம். இவற்றில் ஏதோவொன்று பொருந்தக்கூடியதென்பதை மறுப்பதற்கிடமில்லை. இங்கே கோட்பாடெதுவும் உருவாகக்கூடிய சாத்தியமிருப்பதில்லையென்பதையும் சொல்லி வைக்க வேண்டும் .

(தொடரும்)




தன்னையுருக்கி
தாய்மை பெருக்கி
உன்னை எனக்கை
உலகில் உயரவைத்து
மண்ணை சேிக்க
உ[illegible] தாய்
க[illegible]ந்து
கருணை தனை நிதமூட்டி

விண்ணைப்போல பரந்து
தியான மனம் படைத்து
உண்மை அன்பால்
அரவணைப்பவள் தாய்
து[illegible]ம் வயதில்
து[illegible] நின்று
பள்ளிப்பாடம்

சொல்லித்தந்து
பசிமறந்து
தூக்கம் கலைந்து
உண்ணாமல் உறங்கி
உள்ளத்தில் உறவாடும்
உத்தமி தாய்
வறுமை தெரியா வயதில்
பலதும் பத்தும் தந்து

பணம் சேர்த்து
பாடுபட்டுப் பாரில்
நாம் வளமாய் வாழ
வழிகாட்டுபவள் தாய்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரி.எல். தியாகராஜன்

# ஈழத்தவர் எழுதிய பாட்டு

○ கோகுலராகவன்

**1987** இல் ஒரு தமிழ் சினிமாப் பாடல் வெளியாகி பட்டி தொட்டி எல்லாம் ஒலித்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் முணுமுணுத்த பாடல் அது . பல காதல்கள் உருவாகவும், நிறைவேறவும் உதவியாக அமைந்த பாடல். இந்தியாவில் இந்தப் பாடல் பிரபல்யமானதா, இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது ஆனால் இலங்கையில் இது ஏகோபித்த வரவேற்பைப் பெற்ற பாடல். அருணா இசைக்குழு ஆலயங்களுக்கு பாடவந்தால் அதன் ஆரம்ப கால ஆஸ்தான பாடகர் சுகுமாரை வைத்து இந்தப் பாடலை பாடுவிக்காமல் இரசிகர்கள் விடமாட்டார்கள்.
சுகுமார் இரசிகர்களிடம் பேசுவார்.
"என்ன பாட்டு?"
"அமுத மழை"
"பாடுறேன்."
அதை ஒரு இரகசியக் குரலில் கதைப்பார்.
நான் நீண்டகாலம் அந்தப் பாடலை பாடகர் மனோ பாடினார் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன். அண்மையில் அந்தப் பாடலை மீண்டும் இணையத்தில் தேடிய போதுதான் அதனைப் பாடியவர் ரி.எல் .தியாகராஜன் என்று அறிய முடிந்தது. சரி, அந்தப் பாடல் எது?

**"அமுத மழை பொழியும் முழு நிலவிலே
ஒரு அழகுச்சிலை உடல் முழுதும் நனைந்ததே"**




ஒரு வசீகரமான , மனதைத் தடவும் பாடலாக எல்லோரையும் கவர்ந்த பாடல் இது .
ரி.எல். தியாகராஜன் என்கிற பாடகர், பழைய பாடகரான திருச்சி லோகநாதனின் புதல்வர்களில் ஒருவர். மூத்தவர். அவரது குரல் வளத்துக்கு ஏன் ஒரு பிரபல்யமான பாடகராக மாறவில்லை என்பது ஆச்சரியம்தான். இந்தப் பாடல் இடம் பெற்ற "பொம்பளை மனசு" படம் வெளிவரவும் இல்லை. பாடலுக்கான இசை வழங்கிய இரத்தினசூரியன் இதன் பின் வேறு படங்களுக்கு இசையமைத்தாரா என்பதும் தெரியவில்லை . இன்னொரு ஆச்சரியமான தகவல், இந்தப் பாடலை எழுதியவர் இலங்கை மட்டக்களப்பைச் சேர்ந்த கவிஞர் இளவழகன் என்பவர். இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு படங்களில் பாட்டெழுத போய் ஜெயித்தவர்கள் யாருமே இல்லை. இலங்கையில் இலங்கைத் திரைப்படங்களுக்குப் பாட்டெழுதி பிரபல்யமான ஈழத்து ரத்தினம் கூட தமிழ்நாடு சென்று ஒரு படத்துக்கு (எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்) மட்டுமே பாட்டு எழுதினார். பின்னர் வாய்ப்புக் கிடைக்கவில்லை.
'அமுதமழை பொழியும்...' என்ற இந்தப் பாடலின் பாடகர், இசையமைப்பாளர், கவிஞர் மூவருக்கும் காலம் சரியில்லை. இதன்பிறகு காணாமலே போய்விட்டனர். ஆனால், பாடல் இலங்கையில் உச்சத்தைத் தொட்டது. திரைப்படம் வெளியாகாமல் அதன் பாடல் ஒன்று மிகப்பிரபல்யமானது என்றால் அது இந்தப் பாடலாகத்தான் இருக்கும்.
அந்தப் பாடலுக்காக படம் ஓடியிருக்கலாம் . ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

இந்தப் பாட்டுத் தொடர்பான கதை ஒன்று சொல்கிறேன்.
நவதாஸன் என்னை விட இரண்டு வயது மூப்பானவன்.
நான் 11 ஆம் வகுப்பு
அவன் ஏ.எல்.
தூரத்து முறையில் எனக்கு மைத்துனன்.
படிப்பில் கெட்டிக்காரன்.
கொஞ்சம் இறுகிய பேர்வழி.
இதனால் அவனுடன் நான் பழகியதில்லை.
ஆனால் பள்ளியில் நடக்கும் காதல் கதைகள் எல்லாம் என் வகுப்புப் பொடியள் கண்டு பிடித்து கிசுகிசுப்பார்கள்.
நவதாஸ் இந்தப் பாட்டை எழுதி தன் வகுப்புப் பிள்ளையான விஜி என்கிற விஜிகலாவின் கொப்பிக்குள் வைத்தான் . விஜி கிழித்தாளா ? அல்லது பாடிப்பார்த்தாளா? யாருக்கும் தெரியாது. பொடியள் சொல்வார்கள்.
"அது விழுந்திட்டுதடா"
நக்கல் அடித்தால் , நவதாஸ் எங்களை அடிப்பான்.
என்னவோ பிறகு அவர்களின் காதல் அமைதியாகவே இருந்தது.
அவர்கள் இருவரும் கதைத்து, பேசியதை நாங்கள் கண்டதில்லை.
நாள்கள் நகர்ந்தன. நவதாஸ் ஊரைவிட்டுப் போய்விட்டிருந்தான். எங்கோ ஒரு வாழ்வில் தன் பெயரை கதிரவன் என்று மாற்றிக்கொண்டான்.
பின்னர் நான் அவனைக் (வித்துடலை) கண்டது அவனுக்கான அஞ்சலிக் கூட்டத்தில்.

**விஜி இதன் பின்னர் என்னவானாள்?**
நீங்கள் பின்வரும் மூன்று தெரிவில் எந்த ஒன்றையாவது எடுத்துக்கொள்ளலாம்.
1. தற்கொலை செய்து கொண்டிருப்பாள்.
2. இயக்கத்துக்குப் போயிருப்பாள். திரும்பி வரவில்லை.
3. திருமணம் செய்யாமல் தனியாக வாழ்ந்திருப்பாள்.

அவர்கள் இருவரும், 'அமுத மழை பொழியும் முழுநிலவில்' நனையவே இல்லை.

*(இன்னும் கதைப்பம்)*

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# விலாசம்



"பொதுச்சொத்தோ? இதுகளை நான்தானே திருத்திப் பராமரிக்கிறன். பிறகென்ன பொதுச்சொத்தும், பணியாரமும்...? எடடா சைக்கிளை!" சிதம்பரப்பிள்ளையர் போட்ட சத்தத்தில் அக்கம்பக்கமெல்லாம் சனங்கள் சேர்ந்துவிட்டார்கள்.
"மரியாதையாக் கதை சிதம்பரப்பிள்ளை!"
"உனக்கு மரியாதையோ? உன்னைமாதிரிப் பிச்சையெடுத்துப் படங்காட்டிற ஆளெண்டு என்னை நினைச்சியா?"
அதற்குள் கந்தசாமி சிதம்பரப்பிள்ளையரில் கைவைக்க, அவர் மாணிக்கவாசகரை அடிக்க, நான் அவர்களை விலக்குப்பிடிக்க, அந்த இடமே அல்லோல கல்லோலப்பட்டது. கடைசியில் சிதம்பரப்பிள்ளையரின் மண்டை உடைந்து இரத்தம் வழிந்தது. அவர் அந்தக் காயத்தோடு பொலிஸ்நிலையத்துக்குச் சென்று, மாணிக்கவாசகர் தன்னை ஆள்வைத்துக் கொலை செய்ய முயற்சித்ததாக முறைப்பாடு செய்தபின், மருத்துவமனையில் போய்ப் படுத்துவிட்டார்.
நீதிமன்ற விசாரணையில் கந்தசாமிக்கு ஆறுமாதங்கள் மறியலும், நூறுரூபா இழப்பீடும் விதிக்கப்பட்டன. தாக்குதலுக்கு உடந்தையாக இருந்ததற்காக மாணிக்கவாசகருக்கும், எனக்கும் ஆளுக்கு ஐம்பதுரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அன்றிலிருந்து சிதம்பரப்பிள்ளையருக்கும், எங்களுக்கும் நிரந்தரப் பகையானது. ஆனால், அவருடைய பணபலத்துக்கு முன்னால் எங்களால் ஒன்றுமே செய்யமுடியவில்லை.
அவருடைய மூத்தவன் பாடசாலைப்படிப்பை முடித்தபின், தொழினுட்பக் கல்லூரிப்பக்கம் இழுபட்டுத் திரிந்தான். பிறகு, பிரச்சினைகள் முளைவிடத் தொடங்கிய எழுபதுகளின் பிற்கூறில் வெளிநாட்டுக்கு ஓடித் தப்பிவிட்டான். அவன் எங்கிருக்கிறானென்பது இன்றுவரை எவருக்குமே தெரியாது.
இரண்டாவது மகன் பத்தாம்வகுப்போடு படிப்பைக் குழப்பிவிட்டு நண்பர்களோடு ஊர்சுற்றிக்கொண்டிருந்தான். அவனுடைய கைச்செலவுக்குக் காசு கொடுத்தே சிதம்பரப்பிள்ளையர் களைத்துவிட்டார். அவன் தகப்பனை மிரட்டிக் கையெழுத்து வாங்கிக் காணிகளை விற்கத் தொடங்கினான். இருந்த சொத்துகளை அவன் குடித்தே அழிப்பதைப் பார்த்து வேதனைப்பட்டபடியே சிதம்பரப்பிள்ளையரும் இறந்துபோனார். அவர் இறந்ததோடு அம்மன்கோவில் தேர்த்திருவிழாவும் கைமாறிப்போய்விட்டது. பொதுக்கிணறு இறைப்பாரின்றித் தூர்ந்துபோனது. சுமைதாங்கி மட்டும் சுவரொட்டிகள் ஒட்டுவதற்குப் பயன்பட்டுக் கொண்டிருந்தது.
சிதம்பரப்பிள்ளையர் இறந்தபின்னர் அந்த வீட்டுக்கு யார்யாரோ வந்துபோனார்கள். இரவிரவாகக் கூத்தும், கும்மாளமுமாக அமளிப்படும். சமையல்காரச் சின்னம்மா அவர்களின் ஆய்க்கினைகளைத் தாங்கமுடியாமல் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டாள். மகன்காரன் குடிப்பதற்குக் காசில்லாதபோது வீட்டிலிருந்த பொருள்களை அரைவிலை, கால்விலைக்குக் கொடுக்கத் தொடங்கினான். கடைசியாக, வீடுவளவை விற்பதற்குக்கூட ஓடித்திரிந்தான். காணியின் உறுதியில் மூத்தமகனைப்பற்றிய சிக்கல் இருந்தபடியால் அதை வாங்குவதற்கு யாருமே முன்வரவில்லை. அவனிடம் தாராளமாகப் பணமிருந்தபோது தேடிவந்து 'குதியன்குத்தியவர்கள் 'காலப்போக்கில் வராமல் நின்று விட்டார்கள்.
அதற்குப்பிறகு, அவன் எந்நேரமும் ஆலமரத்தின்கீழ் நின்றிருப்பான். உடல் மெலிந்து, தலைகலைந்து அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். அவன் வீதியால் போய்வருவோரிடம் பணம்கேட்டுக் கெஞ்சுவான். நானும் இரக்கப்பட்டு உணவு வாங்கிக் கொடுத்திருக்கிறேன். அவனும் ஒருநாள் ஆலமரத்தின் கீழ் இறந்துகிடந்தான். அவனுடைய இறுதிச்சடங்கைச் செய்வதற்கு உறவினர்கள் முன்வராதநிலையில் நானும், இயக்கப்பெடியங்களுமாக மயானத்துக்குக் கொண்டுபோய் எரித்தோம்.
எண்பத்தேழில் இந்திய அமைதிப்படையினர் அந்த வீட்டில் முகாமிட்டிருந்தார்கள். அவர்கள் போனபின்பு, அவ்வீடு விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகமாகச் செயற்பட்டது. வலிகாம இடப்பெயர்வுக்குப் பின்னர் அந்த வீட்டை ஆளுக்காள் ஒவ்வொரு பகுதியாகக் கழற்றியெடுக்க ஆரம்பித்து, கடைசியில் நுழைவாயில் தூண்கள்மட்டுமே எஞ்சியிருக்கின்றன.

◘ ◘ ◘ ◘

கனரகவாகனம் கடமுடாவென்று நிலத்தைத் தேய்த்துக்கொண்டு வருகிறது. அந்தச் சத்தம் என்நெஞ்சில் ஓங்கி இடிப்பதைப்போல உணர்கிறேன்.
"ஐயா, எழும்புங்கோ. கிணத்தையும் இடிக்கப்போறம்" ஒருவன் என்னிடம் வந்து சொல்கிறான். நான் திடுக்கிட்டுப்போகிறேன்.
"கிணத்தையுமோ?"
"ஓம் ஐயா. அதையும் உடைச்சுத்தான் றோட்டை அகட்டவேணும்"
"இல்லைத்தம்பி......குறை நினைக்காதையுங்கோ. இது நல்லதண்ணிக் கிணறு. இதைத் திருத்திப் பாவிக்கலாம்தானே!" என்னுடைய குரல் இடறுகிறது.
"ஐயா, எங்களுக்கு அதைப்பற்றித் தெரியாது. நாங்கள் அவங்கள் சொல்லிறதைச் செய்யிறம். உங்களுக்கு ஏதும் பிரச்சினையெண்டால் மேலிடத்திலை கதையுங்கோ" அவன் அலட்சியமாகச் சொல்கிறான்.
நான் எதுவும்பேசாமல் எழுந்துகொள்கிறேன். முதுகு திரும்பவும் வலிக்கிறது. தடியை ஊன்றியபடி வீட்டைநோக்கி நடக்கத்தொடங்குகிறேன்.
"கிழடு...! கட்டையிலை போகிற வயதிலை கிணத்தையும் காவிக்கொண்டு போகப் பாக்குது" அவன் புறுபுறுப்பது எனக்குக் கேட்கிறது.
வீட்டுவாசலுக்கு வந்தபின் திரும்பிப் பார்க்கிறேன். ஆலடிச்சந்தி வெட்டையாகத் தெரிகிறது. நூற்றாண்டுகாலம் மற்றவர்களுக்காக வாழ்ந்து நிழல் பரப்பிய ஆலமரம் சரிந்துகிடக்கிறது. மறுபக்கம், மற்றவர்களை அடக்கியாண்டு அனுபவித்த சிதம்பரப்பிள்ளையரின் பரம்பரை சுவடுகளின்றி அழிந்தேவிட்டது.
ஒன்றுடனொன்று ஒப்பிடமுடியாத இரண்டு வீழ்ச்சிகளும் காலமாற்றத்தின் விளைவுகளென்றே கொள்ளவேண்டும். இன்னும் சிலவருடங்களில் ஆலடிச் சந்தியென்ற பெயரும் இல்லாமற் போய்விடும். ஆலமரமும், அதில் வாழ்ந்த பலவகைப் பறவைகளும், மரத்தின் கீழுறைந்த பசுமையான நினைவுகளும் என்னைவிட்டு அகன்றுசெல்கின்றன. மனம் இறுகிக் கனக்கிறது.
மிகுந்த சோர்வுடன் வீட்டிற்குள் நுழைகிறேன். மகள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். கலக்கத்துடன் அவளை ஏறிட்டுப் பார்க்கிறேன். அவள் எதுவும் பேசவில்லை.

(மீள்பிரசுரம், நன்றி:ஜீவநதி -2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்குதல்



ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் கோட்டை அம்பாந்தோட்டை மாவட்டமே. அங்கு நேரில் களமிறங்கி பிரமாண்ட கூட்டத்தை நடத்தி ராஜபக்சக்களை சீண்டியுள்ளது ஹெலிகொப்டர் கூட்டணி.
மொட்டுக் கூட்டணி அரசியலிலிருந்து விமல், கம்மன்பில, வாசு உள்ளிட்டோர் ஆரம்பத்தில் வெளியேற, அதன்பின்னர் 16 எம்.பி.க்களுடன் வெளியேறினார் டலஸ் அழகப்பெரும. தற்போது இவர்கள் கூட்டணி அமைத்து, சுதந்திர மக்கள் கூட்டணியாகச் செயற்பட்டுவருகின்றனர்.
இவர்களின் பிரதான அரசியல் இலக்கு ராஜபக்ச தரப்புதான். அதனால்தான் பிரசார மேடைகளில் ராஜபக்சக்களை கழுவி ஊத்தி வருகின்றனர். அவர்களுக்கு எதிராக சரமாரியாகச் சொற்கணைகள் தொடுக்கப்பட்டு வருகின்றன.
இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ராஜபக்சக்களின் கோட்டையில் களமிறங்கி மேற்படி தரப்புகள் நேரடித் தாக்குதலைத் தொடுத்துள்ளன.
இந்தக்கூட்டத்தை ஏற்பாடு செய்யும் பொறுப்பு அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உபுல் கலப்பதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரும் கச்சிதமாகக் காரியத்தை செய்துமுடித்தார். கூட்டம் முடிவடைந்த பின்னர் உபுல் கலப்பதி எம்.பியை, டலஸ் அழகப்பெரும் போற்றிப் புகழ்ந்துள்ளாராம். " நாம் ராஜபக்சக்களின் கோட்டையில் இருக்கின்றோம். எமது தாக்குதல் வெற்றி. அவர்களின் முகாமுக்கே வந்து கனரக ஆயுதத்தால் தாக்குதல் தொடுக்கப்பட்டது போல் ஓர் உணர்வு" எனவும் டலஸ் குறிப்பிட்டாராம்.

○ சுழியன்

# அறிந்தும் அறியாமலும்


## வறுத்தெடுப்பு

நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஜனாதிபதியிடம் 500 மில்லியன் ரூபாவைக் கையளித்திருந்தார்.
வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் உட்பட தமது அமைச்சின்கீழ் செயற்படும் நிறுவனங்களுக்கு கிடைத்த இலாபத்தில் இருந்தே மேற்படி தொகையை அமைச்சர் வழங்கியுள்ளார். இதனையடுத்து தேவையான மருந்துகளைக் கொள்வனவு செய்யுமாறு ஆலோசனை வழங்கி,அந்த நிதியை சுகாதார அமைச்சிடம் கையளித்தார் ஜனாதிபதி.
இவ்வாறு 500 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தாலும், கூடுதல் விலைக்கு சுமார் 600 மில்லியன் ரூபா வரை மருந்துகள் வாங்கப்பட்டுள்ளனவாம்.
இந்த விடயம் ஜனாதிபதிக்கு தெரியவர, சம்பந்தப்பட்ட அமைச்சரையும், தொடர்புபட்ட அதிகாரிகளையும் வார்த்தைகளாலேயே வறுத்தெடுத்துள்ளாராம் ஜனாதிபதி.

## நிறுத்தம்

உள்ளூராட்சிசபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது உறுதியாகத் தெரியாத நிலையில், பெருமெடுப்பிலான தேர்தல் பிரசாரக் கூட்டங்களை இடைநிறுத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.
இதன்படி மாவட்ட மட்டத்தில் நடைபெறும் பிரதான கூட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டாமென அமைப்பாளர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உட்பட மேலும் சில கட்சிகள் ஆலோசனை வழங்கியுள்ளன.
எனினும், தேர்தல் நடந்தாலும், நடக்காவிட்டாலும் கிராமிய மட்டத்திலான கூட்டங்களைத் தொடர்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, தேர்தலை நடத்ததவறும் அல்லது தேர்தலைப் பிற்போட எத்தனிக்கும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்டப் போரை ஆரம்பிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.





## முறுகல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், அந்தக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
தயாசிறி ஜயசேகர வெளிநாடு சென்றிருந்த நிலையில், கட்சிக்கு பதில் பொதுச்செயலாளர் ஒருவரை மைத்திரி நியமித்தார். அவரின் பதவியேற்பு நிகழ்வும் தடல்புடலாக நடந்தது.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பொதுச்செயலாளர் பதவி வகிப்பவர்கள் இதற்கு முன்னரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அவ்வேளைகளில் பிரதிச் செயலாளரே, பதில் செயலாளராக இயங்குவது வழமை. பதவியேற்பு நடக்காது. நியமனக் கடிதங்களும் வழங்கப்படமாட்டாது.
எனினும், தயாசிறி மீது சுதந்திரக்கட்சியில் இருந்து வெளியேறிய பலருக்கு அதிருப்தி. நிமால் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க போன்றவர்கள் அதில் பிரதானமானவர்கள். தயாசிறியை நீக்கினால் கட்சியைக் கட்டியெழுப்பலாம் என இவர்கள் மைத்திரிக்கு தூதனுப்பியுள்ளனர்.
இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தயாசிறியை பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்குவதற்கு பிள்ளையார் சுழி போட்டுள்ளார் மைத்திரி.

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

அரசாங்க அதிபர் பெஞ்சமின் ஹோர்ஸ் பேர்க் (Benjamin Horseberg) கொழும்புக்கு இறைவரிக்கட்டுப்பாட்டாளராக நியமனம் பெற்றுச்செல்ல, கொன்ஸ்ரன்ரைன் (Constantaine) அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.
கொன்ஸ்ரன்ரைன் அரசாங்க அதிபராக பதவியேற்ற சில நாள்களில் அரசாங்க அதிபர் கொன்ஸ்ரன்ரைனின் மகன் 24 வயதில் காலமானார். இவர் இலங்கையிலேயே பிறந்தார்.

**1919 ஏப்ரல் 19**
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பணிப்பாளர் உயர்நீதிமன்ற சட்டத்தரணி சி.தம்பாப்பிள்ளை காலமானார்.

பிரிட்டனைச்சேர்ந்த சிமெந்து உற்பத்தி நிபுணர் சிம்கொக் (Simcock) யாழ்ப்பாணம் வந்து, யாழ்ப்பாண மண்ணின் மாதிரியை எடுத்துச்சென்று ஆய்வு செய்ததில் யாழ்ப்பாண மண் சிமெந்து உற்பத்திக்கு மிகவும் பொருத்தமானது எனக் கண்டுபிடித்தார்.

**1919 ஓகஸ்ட் 19**
யாழ்ப்பாணத்தில் அழிந்து வரும் பாரம்பரியக் கலைகளை அழிய விடாது தடுக்கும் நோக்குடன் கலைக்கல்லூரி ஒன்று அரச நிதிப்பங்களிப்புடன் பொதுமக்களின் பங்களிப்பும் சேர்த்து உருவாக்கப்பட்டது.சட்டத்தரணி சிவக்கொழுந்து இதில் முன்னின்று உழைத்தார்.மொத்தம் 3,000 ரூபா சேர்ந்தது.
அரசாங்க அதிபர் பிறீமனை கௌரவிக்கும் முகமாக இணுவில் மருத்துவமனையில் வறிய மக்களின் நன்மை கருதி பிரசவ விடுதி ஆரம்பிக்கப்பட்டது.இந்த விடுதி அமைப்பதற்கு இராமலிங்க முதலியார், சபாபதி,ஆசைப்பிள்ளை ஆகியோர் 1500.00 ரூபா அன்பளிப்புச்செய்தனர்.1970 களின் பிற்பகுதிவரை யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்து தாய்மார் பிரசவத்துக்கு இணுவில் மருத்துவமனையை நாடினர்.
விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இந்த மருத்துவமனையிலேயே பிறந்தார்.
அரசாங்க அதிபர் பிறீமன் ஓய்வு பெற்று இங்கிலாந்து திரும்பினார்.

**1919 ஒக்ரோபர் 11**
தம்பாப்பிள்ளை முதலியார் காலமானார். கொக்குவிலைச் சேர்ந்த இவர் ஆரம்பத்தில் மல்லாகம் நீதிமன்றில் தமிழ் எழுத்தாளராக நியமனம் பெற்று பின்னர் யாழ்ப்பாண நீதிமன்றத்திலும் கண்டி நீதி மன்றத்திலும் மொழிபெயர்ப்பாளராகப் பணி புரிந்தார்.பின்னர் தென்மராட்சி மணியகாரனாகவும் யாழ்ப்பாண மணியகாரனாகவும் நியமனம் பெற்று , அதன்பின்னர் ஆளுநர் மாளிகை முதலியாராகவும் கடமையாற்றினார்.

**1919 ஒக்ரோபர் 18**
திரு. பெல் காலமானார். றிம்மரின் (றிம்மர் மண்டபம்) மருமகனான இவர் காங்கேசன்துறை - கொழும்பு புகையி ரதப்பாதை அமைக்கும் பணிகளில் பொறியியலாளராகக் கடமையாற்றி பின்னர் பர்மாவுக்குச்சென்று , பர்மா புகையிரத சேவையில் கடமையாற்றிக்கொண்டிருந்த வேளையில் அங்கு காலமானார்.

**1919 ஒக்ரோபர் 25**
அரசாங்க அதிபர் கொன்ஸ்ரன்ரைன் (Consta ntaine) யாழ்ப்பாணத்திலிருந்து விலகிச் செல்ல திரு. கொட்றிங்டன் (Codrington) பதில் அரசாங்க அதிபராக பதவியேற்றார்.

**1919 ஒக்ரோபர் 29**
திரு.எர்னஸ்ட் ஆபிரகாம்(Ernest Abraham) கொழும்பில் அமைக்கப்பட்ட முதலாம் உலகப்போர் வெற்றிக்கான நினைவுச்சின்னத்தை வடிவமைத்தமைக்காக 200.00 ரூபா பரிசு பெற்றார்.

**1920 ஜனவரி 13**
அரசாங்க அதிபர் கொட்றிங்டனின் குழந்தை ,கொழும்பு மருத்துவமனையில் மரணமடைந்தது.

**1920 ஜனவரி 22**
சுன்னாகத்தில் பாரம்பரிய கலைக்கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

**1920 பெப்ரவரி 15**
அரிசிப்பங்கீடு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

**1920 பெப்ரவரி 20**
இலங்கையில் ஏற்பட்ட உணவுப்பஞ்சத்தை நீக்க உதவுமாறு இந்திய மகாதேசாதிபதியிடம்(Viceroy) கோரிக்கை விடுக்கும் நோக்குடன் இலங்கையிலிருந்து குழு ஒன்று புறப்பட்டது.
இந்தக்குழுவில் சுவேட்டன் ,அதமலி,ராஜபக்ச முதலியார், வணக்கத்திற்குரிய சபாபதி, அப்துல் அலி,வி.பி.சோமசுந்தரம், ராஜு காசிம்,எல்.முத்துக்கிருஷ்ணா ஆகியோர் அடங்கியிருந்தனர்.இவர்களின் கோரிக்கையையடுத்து இந்திய மகாதேசாதிபதி ஒரு தொகுதி அரிசியை இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.
அரசாங்க அதிபர் கொன்ஸ்ரன்ரைன் யாழ்ப்பாணம் வந்து கடமையைப் பொறுப்பேற்றார்.

**1920 மே 01**
யாழ்ப்பாணம் கச்சேரியில் முன்னைய அரசாங்க அதிபர்களின் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

**1920 ஜூன்**
சுன்னாகம் குமாரசாமிப்புலவருக்கு அவரது தமிழ்ப்பணிகளைப்பாராட்டி அரசாங்கம் 250.00 ரூபா அன்பளிப்பாக வழங்கியது.
லெப்டினென்ட் வி.முத்துக்குமாரு பக்தாத்திலுள்ள மருத்துவமனையின் இந்தியப்பிரிவு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் யாழ்ப்பாண மணியகாரனாக கடமையாற்றிய முத்துக்குமாருவின் சகோதரனாவார்.

**1920 ஜூன் 22**
சென்னை பிரதம தபால் நிலைய தலைமை தபால் அதிபராக கடமையாற்றிய மல்லாகத்தைச் சேர்ந்த ராவ் பகதூர் லிங்கம் காலமானார்.

**1920 ஜூலை**
தமிழறிஞர் நல்லூர் பெரியதம்பி காலமானார்.மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய போல் பீரிஸ் 'Kingdom of Jaffnapatam' என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக செய்யப்பட்டது.
கொழும்பு பிரதம தபாலகத்தில் பிரதம தபாலதிபராக கடமையாற்றிய சவரிமுத்து முதலியார் காலமானார்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org